Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 தை 09 ஞாயிற்றுக்கிழமை (23.01.2011) பக்கங்கள் 12 ஓசை - 115

## ஐ.நா.நிபுணர் குழுவுடன் பேச்சு இல்லை; அவர்களின் இலங்கை விஜயம் சாத்தியமில்லை

### ஐ.நா.வுக்கான இலங்கைத் தூதுவர்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவுடனான நேரடிப் பேச்சுக் களை இலங்கை அரசாங்கம் துண்டித்துள்ளதாக ஐக்கிய நாடு கள் சபையின் உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இந் நிபுணர் குழுவின் இலங்கைக்கான விஜ யமும் சாத்தியப்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருப் பதாக இவ் அதிகாரிகள் கூறியு ள்ளனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)



## கடத்தப்பட்டவர் சடலமாக மயானத்திலிருந்து மீட்பு!

(கொழும்பு)

கொழும்பை அண்டிய பிரதேசத்தில் வைத்து நேற்று வெள்ளை வானில் வந்த இனந் தெரியாதவர்களால் கடத்தப்பட்டிருந்த நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது சடலம் மகரகமை மயானம் ஒன்றிலிருந்து நேற்று மீட் கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்ட இந்நபர் நேற்று முன் தினம் மாலை நான்கு மணியளவில் கொழும்பை அண்டிய பிர தேசமான மாலபேயில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

வெல்லம்பிட்டிய, கோகிலவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த ரொஷான் பெரேரா என்பவரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட் டுக் கொலை செய்யப்பட்டவராவார்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்.வன்முறைச் சம்பவங்கள்; தடுத்து நிறுத்த கூட்டு நடவடிக்கை



## 24 மணி நேரமும் படையினர் ரோந்து

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக அதிகரித்துவரும் கொலைகள், கொள ளைகள் போன்ற வன்முறைகளை கட்டுப்படுத்துவது குறித்த விசேட மாநாடொ ன்று நேற்றுக் காலை யாழ். மாவட்டச் செயலகத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்றுள்ளது.**

யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்து ருசிங்க, பிரதி பொலிஸ்மா அதி பர் சுசில் பெரேரா, யாழ். சிரே ஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் கருணாரட்ன, யாழ் மறை மாவட்ட ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம் அடி களார் மற்றும் பல்வேறு மதகுரு மார், பிரதேச செயலாளர்கள், யாழ். மாநகரசபை உறுப்பினர் கள் முதலானோர் இம்மாநாட்டில் கலந்துகொண்டதாக அரச அதி பர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

குற்றச்செயல்களைக் கட்டுப்

(11ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விலை உயரும்

(கொழும்பு)

பெற்றோல் மற்றும் டீசல் விலையை அதிகரிப்பதற்கு லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அரசாங கத்திடம் அனுமதி கோரியுள்ளது.

சர்வதேச சந்தையில் பெற் றோலியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதால், இவ்விலை அதிகரிப்புக்குத் தாம் அனுமதி கோரியுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் நிர்வாக இயக்கு நர் சுரேஷ்குமார் தெரிவித்தார்.

## யாழ்.உள்ளூராட்சித் தேர்தல் களம் சுயேட்சைக் குழுக்களும் களத்தில்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக சுயேட் சைக்குழு ஒன்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக யாழ்.உத வித் தேர்தல்கள் ஆணையாளர் குகநாதன் நேற்றுத் தெரிவித்தார்.

வலி.கிழக்குப் பிரதேசசபைக் குப் போட்டியிடும் சுயேட்சைக் குழு ஒன்றே தமது கட்டுப்பணத் தைச் செலுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் களத்தில் பல கட்சிகள் போட்டியிட இருப்பதாகவும்,தேர் தலுக்காகப் புதிய அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(பா)

## வடக்கில் மேலும் ஒரு இலட்சம் பேர் மீளக்குடியமர்வதற்கு ஏற்பாடு!



(யாழ்ப்பாணம்)

தமிழ்நாட்டில் அகதிக ளாக இருப்பவர்களில் ஒரு இலட்சம் பேரை அடுத்த ஆண்டில் வடக் கில் மீள்குடியமர்த்த நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, நேற்றுக் காலை யாழ்.பிரதான தபாலகத்தில் இடம்பெற்ற வடமா காண சுங்கத் திணைக்கள அலுவலகத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரி வித்தார்.

அவர் மேலும் கூறுகையில், அர்ப்பணிப்புடன் கூடிய அரச சேவையும், நிம்மதியான வாழ் விற்கு வழிகோலும் எனத் தெரிவித்தார்.

மேலும் மாண்புமிகு ஜனாதி பதி அவர்களால் முன்வைக்கப் பட்ட கருத்தான, மக்களுக்கு அதியு யர் சேவையினை வழங் குங்கள். அதன் மூலம் மக்களிடம் இருந்து கிடைக்கும் பராட்டுக்களே அதிகாரிகளுக்கு

(11ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு கொலை அச்சுறுத்தல்




(கொழும்பு)

மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் போட்டியிடவுள்ள தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு வேட்பாளர்களுக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

அம்பாறை மாவட்ட நாவிதன்வெளி பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக போட்டியிடவுள்ள வேட்பாளர் களுக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மாகாண சபை உறுப்பினரான புஷ்பராஜா என்பவர் தங்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்து வருவதாக வேட்பாளர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தனிடம் முறைப் பாடு செய்துள்ளனர்.

இதுகுறித்து சந்திரகாந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்பீட உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளதுடன் பொலிஸில் முறைப்பாடு ஒன்றையும் செய்துள்ளார்.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணை ந்து செயற்பட்டு மாகாணசபைத் தேர்தலின் போது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்குத்தாவிய புஷ்பராஜா இம்முறை போட்டியிடவுள்ள வேட்பாளர்களுக்கும், கட்சி ஆதரவாளர்களுக் கும் கொலை அச்சுறுத்தல் விடுத்து வருவதாக முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் பொலிஸ் மா அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

புத்தொளி பெறும் யாழ்ப்பாணம்

# அடுத்த இரண்டு வருடங்களில் 'லக்ஷபானா' மின்சாரம் யாழ். வரும்!

(யாழ்ப்பாணம்)

இன்னும் இரண்டு வருடங்களில் யாழ்ப்பாணத்துக்கு லக்ஷாபானா மின்சாரம் கிடைக்கவுள்ளது என, இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பொதுமுகாமையாளர் வி.கே.பி.எஸ். குணதிலக தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையின் யாழ் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வடபகுதிக்கு லக்ஷபானா மின்சாரம் வழங்குவதற்கான திருத்த வேலைகள் நடைபெற்று வருவதாகவும், இதற்காக ஜப்பானின் ஜெமிக்ஸ் வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் இணைந்து 7 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்கும், கிளிநொச்சியில் இருந்து சுன்னாகத்துக்கும் மின்மாற்றிகளை நிறுவுவதன் மூலம் வடபகுதிக்கு சீரான மின்சாரத்தை வழங்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

தற்போது இதன் முதற்கட்ட திருத்த வேலைகள் வவுனியாவில் ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவித்த அவர், எதிர்வரும் 2012 ஆண்டின் இறுதிக்குள் கிளிநொச்சிக்கு லக்ஷபானா மின்சாரம் கிடைக்கக் கூடியவாறு வேலைகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கிளிநொச்சிக்கு லக்ஷபானா மின்சாரம் கிடைத்ததும் அதன் அடுத்த கட்டமாக கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான மின் வழங்கலுக்கான திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்த மக்களுக்கு அந்தந்த பகுதி கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலர் உறுதிப்படுத்தலுடன் இலவசமாக மின்னிணைப்பு வேலைகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாகவும் மின்சார சபையின் வடபிராந்திய பொதுமுகாமையாளர் வி.கே.பி.எஸ். குணதிலக மேலும் தெரிவித்தார்.

## தேசத்தின் நிழல் செயற்றிட்டம்; முன்னேற்ற அறிக்கை கோரப்படுகிறது

(அச்சுவேலி)

ஜனாதிபதியின் இரண்டாவது பதியேற்பை முன்னிட்டு அமுல்படுத்தப்பட்ட தேசத்தின் நிழல் தேசிய மரம் நடுகை வேலைத்திட்டத்திற்கமைய பாடசாலைகளில் நாட்டப்பட்ட மரக்கன்றுகள் தொடர்பாகவும் அவற்றின் வளர்ச்சி பற்றியும் அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். வலய பாடசாலைகளுக்கு வலயக் கல்விப் பணிப்பாளரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டப்பட்ட மரங்கள் வளர்ச்சியடைந்து நிலைபெற வேண்டுமென்பது இத்திட்டத்தின் பிரதான நோக்கம். ஆதலினால், இம்மரக்கன்று தொடர்பாக வளர்ச்சி பற்றி அறிக்கையுடன் அது பற்றிய குறிப்புப் புத்தகமும் பேணப்படவேண்டும். மரக்கன்றுகளின் விபரங்கள் கணினி மயப்படுத்தி, குறிப்புப்புத்தகம் பேணப்படல், மரங்களின் வளர்ச்சி, பாதுகாப்பு விடயங்களைக் கவனிக்கப் பொறுப்பளிக்கப்பட்ட ஆசிரியர் விபரம், மரங்களை நாட்டிய மாணவர் பெயரப்பட்டியல், பிரதேச செயலக சுற்றாடல் அதிகாரிக்கு மாதாந்த அறிக்கை சமர்ப்பித்தல் போன்ற விடயங்களுடன் மரநடுகை வீர, வீராங்கனை தெரிவு செய்து பரிசில் வழங்கல் ஆகிய விடயங்களிலும் கவனம் செலுத்துமாறு அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதுடன், இவ்விடயங்களை உள்ளடக்கிய கையேடு, மேற்பார்வை அட்டவணை மாதிரிகளும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. (03)

## பாடசாலைகள் தோறும் மேற்பார்வைக் குழுக்கள்

(அச்சுவேலி)

வடமாகாணப் பாடசாலைகளில் கல்வித் தர உறுதிப்பாட்டினை மேம்பாடடையச் செய்வதற்காக உள்ளக மேற்பார்வை மற்றும் வெளியக மேற்பார்வை என்பன தொடர்பான அறிவுறுத்தல்கள் மாகாண கல்விப் பணிப்பாளரினால் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வடமாகாணத்திலுள்ள 1016 பாடசாலைகளில் கடமையாற்றும் 13 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபட்டு வருகின்றனர். இவ் ஆசிரியர்கள் மூலம் மாணவர்களின் அடைவை உயர்த்துவதற்காக பல்வேறு நடைமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கமைய பாடசாலைகள் தோறும் உள்ளக மேற்பார்வைக் குழுக்கள் நிறுவப்பட்டு அவற்றின் மூலம் ஒவ்வொரு ஆசிரியர்களும் மாதத்திற்கு இரு முறை மேற்பார்வைக்கு உள்ளாக்கப்பட வேண்டியதுடன், அது தொடர்பான புள்ளியிடல் வழங்கப்பட்டு அவை ஆவணப்படுத்தப்பட்டு கோவைப்படுத்தி பேண வேண்டும் எனவும் அதில் மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (03)

## யாழ். தபாலகங்கள் பூரண கணினி மயம்

அஞ்சல் மா அதிபர் எம். கே. பி. திசாநாயக்க தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அஞ்சல் திணைக்கள நடவடிக்கைகள் பூரணமான கணினி மயப்படுத்தலுடன் சேவையை இவ்வருட இறுதிக்குள் வலைப்பின்னல் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அஞ்சல் மா அதிபதி எம்.கே.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். பிரதம தபாலகத்தில் நடைபெற்ற சுங்கத் திணைக்கள அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் யாழ். பிரதம தபாலகத்திற்கு இரண்டு தபால் சேவை வாகனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், அண்மையில் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட மூன்று தபால் சேவைவாகனங்களில் இரண்டு வாகனங்களே இவ்வாறு வழங்கப்படவுள்ளதாகவும், இதன் மூலம் வடபகுதிக்கான அஞ்சல் சேவை மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (பா)

## கல்வி அபிவிருத்திக் குழு நாளை முதல் செயற்படும்

(கொக்குவில்)

புதிதாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ள குருநகர் கல்வி அபிவிருத்திக் குழு நாளை திங்கட்கிழமை தொடக்கம் தமது சேவையை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில் தினமும் மாலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை தரம் 4 - 5 ஆகியவற்றிக்கும் 10-11 வகுப்புகளுக்குமான மீட்டல் வகுப்புகள் துறைசார் ஆசிரியர்களால் வழங்கப்படவிருக்கின்றது.

தமிழ் மற்றும் கணக்கு, ஆங்கிலம் முதற்கொண்ட பாடநெறிகள் இலவசமாக வழங்கப்படவிருப்பதாகவும், கல்வி அபிவிருத்திக் குழு முக்கியஸ்தர் தெரிவித்தார். (68)

## வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் விரைவில் மருதனார்மடத்தில் இயங்கும்

வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் பெப்ரவரி முதலாம் திகதி முதல் மருதனார்மடத்தில் இயங்கும் என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு அதற்குட்பட்ட திணைக்களங்கள் நேற்று மருதனார்மடம் வலிகாமம் வலயக் கல்வி அலுவலக கட்டடத் தொகுதியின் மேற்தளத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. திருகோணமலையிலிருந்து படிப்படியாக எமது பணிகளை யாழ்ப்பாண அலுவலகத்திற்கு மாற்றம் செய்து எதிர்வரும் முதலாம் திகதி முதல் வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் மருதனார்மடத்தில் முழுமையாகத் தனது பணிகளை ஆரம்பிக்கும்.

அத்துடன் வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு அடுத்த மாதம் முதல்வாரத்திலிருந்து தனது பணிகளை மருதனார் மடத்தில் ஆரம்பிக்கும் என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

## புதிய கட்டடத்தில் சமாச அலுவலகம்


(குடத்தனை)

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் புதிய அலுவலகக் கட்டடம் தாளையடி பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, இது வரை குடத்தனை பொற்பதியில் அமைந்திருந்த தலைமைச செயலகத்தில் நடைபெற்ற சமாச நடவடிக்கைகள் யாவும் தாளையடியில் அமைந்துள்ள புதிய கட்டடத்துக்கு இடம்மாற்றப்பட்டு நேற்று முன்தினம் தொடக்கம் இயங்கி வருகின்றது.

அத்துடன் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியுள்ள கடற்றொழிலாளர்களின் நலன் கருதி அவர்களுக்குத் தேவையான மண்ணெண்ணெய், ஒயில் ஆகியன மாமுனை, தாளையடி, ஆழியவளைக் கிராமங்களில் அமைந்துள்ள கிளை நிலையங்களூடாக வழங்கப்பட்டு வருகின்றது. (70)

## பழுதடைந்த வீதியால் பயணிப்போர் பரிதவிப்பு

ஏ-9 வீதியில்; மிருசுவில்-நாவற்குழி வீதி எப்போது திருத்தப்படும்?



(யாழ்ப்பாணம்)

யாழ். ஏ9 பிரதான வீதியில் மிருசுவில் தொடக்கம் நாவற்குழி வரையான வீதி பழுதடைந்து காணப்படுவதனால் அதில் பயணிக்கும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரியவருகின்றது.

இந்த வீதி பழுதடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுவதனால் அடிக்கடி இந்தப் பகுதியில் விபத்துக்கள் ஏற்படுவதுடன், புழுதிகள் காற்றின் மூலம் வெளியே அடித்துச் செல்லப்படுவதனால் பயணிகள் சுவாசிப்பதற்கு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். வீதி சீரின்மை காரணமாக இந்த வீதியால் பயணிகள் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது நடைபெற்று வரும் வீதி புனரமைப்புக் காரணமாக வீதியில் தூசிகள் காணப்படுவதனால் பயணிகள் பயணிக்க முடியாத நிலை காணப்படுகிறது.

## தென்னை நாற்று விநியோகம்

(கொழும்புத்துறை)

மணியந்தோட்டத்தில் மீளக்குடியேறிய மக்களில் வீட்டுத் திட்டம் பெற்ற பயனாளிகளுக்கு சோபா நிறுவனத்தால் குடும்பம் ஒன்றிற்கு பத்து தென்னை நாற்றுக்கள் வீதம் 1000 தென்னைங் கன்றுகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த யுத்தத்தால் பாதிப்புக்குள்ளான தென்னைகளைால் மக்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ள நிலையில், தற்போது நம்பிக்கையுடன் ஒவ்வொரு வீட்டிலும் தென்னங்கன்றுகளை நாட்டுவதிலும் அதைப் பராமரிப்பதிலும் மணியந்தோட்ட மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். (52)


கம்சன் ஹாட்வெயர்

(மொத்த விற்பனையாளர்கள்)

நேரடி இறக்குமதியாளர்கள்

எம்மிடம்
- மின்சார உபகரணங்கள்
- நீர் இறைக்கும் இயந்திரங்கள்
- குளியலறைச் சாதனங்கள்
- விவசாய உபகரணங்கள்
- தச்சு வேலை உபகரணங்கள்
- மோட்டார் பொறியியல் உபகரணங்கள்
- ரைல்ஸ் கட்டிங்
- கதவுப் பூட்டுகள்
- ஆமைப்பூட்டுகள்
- வெல்டிங் உபகரணங்கள்
- பாதுகாப்பு உபகரணங்கள்
- கதவு, யன்னல் பிற்றிங் பொருட்கள் மற்றும் இதர ஹாட்வெயர் பொருட்கள்



Tel: 011 243 5413
011 233 2834
Fax: 011 233 7353

235, பழைய சோனகத்தெரு, (Old Moor Street) கொழும்பு - 12

(ஆர்-013)

மக்கள் விழித்துக்கொண்டிருக்கும் வீட்டில் திருடர்கள் நுழைவதில்லை. அதுபோல நீ எப்பொழுதும் எச்சரிக்கை உள்ளவனாக இருந்தால் உனது தூய்மையைக் கொள்ளை கொள்ளக் கூடிய கெட்ட எண்ணங்கள் எதுவும் உள் மனதில் ஏற்படா. -இராமகிருஷ்ணர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## மக்களும் மதிப்பீடும்

யாழ்ப்பாணத்தில் ஊடகக் கலாசாரம் எப்படி இருக்கின்றது என்று ஒருவர் இன்னொருவரிடம் கேட்கவும், அவர் சொன்ன பதில் ஆச்சரியமாக இருந்தது.

அதாவது, தமிழ் மக்கள் எப்போதும், அரச எதிர்ப்பு மனோ நிலையுடனேயே இருப்பார்கள். அதையே எதிர்பார்ப்பார்கள்.

அரசாங்கத்தைப் பற்றி காரசாரமாக செய்தி சொல்லப்பட்டால் அல்லது அரசுக்கு எதிராக ஏதேனும் சம்பவம் நடந்தால் தமிழ் மக்கள் அதை விரும்புவார்கள். அது பற்றிய விரிவான தகவல்களை விரும்புவார்கள்.

அவர்களின் எதிர்பார்ப்புக்குத் தீனிபோடும் விதமாகவே யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிகைகள் இயங்க வேண்டியுள்ளது.

அதையே செய்து கொண்டிருக்கின்றோம். உதாரணத்துக்கு, சர்வதேச எதிர்ப்புகள், எதிர்க்கட்சியின் எதிர் நடவடிக்கைகள், கூட்டமைப்பின் கூச்சல்கள், வீரப்பேச்சுக்கள் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

அரசை எதிர்க்கும் மனோ நிலை என்றால், எதிர்க்கட்சி, ஜே.வி.பி. போன்ற கட்சிகளை ஏற்றுக் கொள்கின்றார்கள் என்று அர்த்தமாகாது.

நாளை இதே எதிர்க்கட்சிகள் அரசாட்சிக்கு வந்தால், இதே அரச கட்சி எதிர்க்கட்சியானால், ஆளும் கட்சியான எதிர்க்கட்சியை எதிர்ப்பார்கள். இப்போதைய ஆளும் கட்சியான எதிர்க்கட்சியை ஆதரிப்பார்கள். இதுதான் தமிழர்களின் அரசியல் தந்திரோபாயம்.

இதற்கு மாறாக, ஒன்றுமை, ஓரணி, அபிவிருத்தி வேலை வாய்ப்பு என்று சொன்னால் அதை ஏற்கமாட்டார்கள். ஆனால், அதன் நன்மைகள் தமக்கு இம்மியும் குறையாமல் கிடைக்க வேண்டுமென எதிர்பார்ப்பார்கள். அதற்காக அரசின் அமைச்சர்களை நாடுவார்கள்.

தமிழ் மக்களின் அரசியல் ஸ்திரத்தன்மையை எவரும் தீர்மானிக்க முடியாது.

வித்தியாசமான சிந்தனையுடையவர்கள். இதுதான் குறிப்பாக, வடபுலத்துத் தமிழர்களின் நிலைமை என்பதை அடித்துக் கூறமுடியும். ஏன் என்றால் யாழ்ப்பாணத்தில் நீண்ட வரலாற்றைக் கொண்ட பத்திரிகையின் அனுபவம் எங்களுக்கு உண்டு.

இதற்கு மாறாக, எவர் ஊடகம் நடத்தினாலும் அது எடுபடாது. உதாரணத்துக்கு விளம்பரங்கள்கூடக் கிடைக்காது என்று அந்த ஊடகர் அறுத்துக் கொட்டி புல்லரித்ததை நினைத்துக் கண்ணீர் வந்து விட்டது.

யாழ்ப்பாணத்து மக்கள் பற்றி எவ்வளவு கீழ்த்தரமான மதிப்பீடு இவர்களிடம் உண்டு. மக்கள் சுய மதிப்பீடு ஒன்றை செய்யாதவரை மக்கள் பற்றிய அவர்களின் மதிப்பீடு இப்படித்தான் இருக்கப்போகின்றது.

ஆசிரியர்.

# நல்லிணக்க ஆணைக்குழுவின் பதிவுகள் அம்பாறை மாவட்டத்துடன் முடிவுறும்



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்டத்துக்கான விஜயத்துடன் பொதுமக்களிடமிருந்து சாட்சியங்களைப பதிவுசெய்யும் நடவடிக்கையை ஆணைக்குழு நிறைவு செய்யவுள்ளதாக ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஸ்மன் விக்ரமாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், பொது மக்களிடமிருந்து சாட்சியங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கை ஜனவரி 31ஆம் திகதியோடு நிறைவு செய்யத் தீர்மானித்திருந்தோம். எனினும் கிழக்கில் ஏறபட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக அம்பாறை மாவட்டத்திற்கான விஜயம் ஒத்திவைக்கப்பட்டதனாலேயே சாட்சிய பதிவுக்கான காலம் நீடிக்கப்பட்டது.

பொதுமக்களால் வழங்கப்பட்ட சாட்சியங்களைக் கொண்டு இறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்கான நீண்ட காலம் தேவையென்பதனாலேயே அம்பாறை மாவட்டத்துக்கான விஜயத்துடன் சாட்சியங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை நிறைவுசெய்யப்படவுள்ளது.

வெள்ள அனர்த்தம் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்ட விஜயம் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் இடம்பெறும்.

இதேவேளை, ஆணைக்குழுவின் சாட்சியப் பதிவு நடவடிக்கை நிறுத்தப்படுவதன் காரணமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் போன்ற பல முக்கிய தலைவர்கள் சாட்சியமளிக்க சந்தர்ப்பம் கிடைக்காமல் போகலாம் என ஆணைக்குழுவின் உயா அதிகாரியொருவர் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை மே மாதமளவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கால்கோள் விழாவின்போது சிசுஉதான கணக்குத் திறப்பு

(தொல்புரம்)

யாழ். இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தரம்1 மாணவர்களுக்கான கால்கோள் நிகழ்வின் போது, இலங்கை மக்கள் வங்கிக் கிளையினரால் சிசு உதான சிறுவர் சேமிப்புக் கணக்குத் திறந்து வைக்கப்பட்டது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த வங்கி அதிகாரி ஒருவர் 2011 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 2011 மார்ச் 31 வரை எமது வங்கியில் "சிசு உதான" கணக்கு ஒன்றில் வைப்புச் செய்யும் பணத்திற்கு நிகரான ரூபா 500 வரையான பணப்பரிசினை மக்கள் வங்கி அக்கணக்கிற்கு வழங்குமெனத் தெரிவித்தார்.

இதேவேளை கால்கோள் விழாவில் மாணவர்களின் பெயரில் கணக்குகளைத் திறந்தபெற்றோருக்கு மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் மக்கள் வங்கிக்கிளையினரால் அன்றைய தினம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். (26)

# கழுத்துக் குத்தி நோய்த்தாக்கத்தால் கிளிநொச்சி நெற்பயிர்கள் பாதிப்பு

(கிளிநொச்சி)

அண்மையில் பெய்த மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நெல் வயல்களில் நோய்த்தாக்கம் பரவி வருவதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் குறிப்பாக இராமநாதபுரம், மகிழக்காடு, கனகபுரம் ஆகிய பிரதேசங்களிலுள்ள வயல்நிலங்களில் இந்த நோய்த்தாக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. அத்துடன் ஏறத்தாழ 600 ஏக்கர் நெற்பரப்பில் இந்த நோய் பரவியுள்ளது.

இந்நோய் ஏற்படும் போது இலைகளில் கண் வடிவ புள்ளிகள் தோன்றுவதாகவும் பின்னர் விரிவடைந்து நடுப்பகுதி ஒடுங்கியும் காணப்படும். அத்துடன் நெற்கதிர்களின் மத்திய பாகம் நரைநிறமாகவும் சூழவுள்ள பகுதி கபிலநிறமாகவும் மாறி வருவதை அவதானிக்க முடியும்.

இந்த நோய்த் தாக்கம் காணப்படும் வயல்களிலிருந்து ஏனைய வயல்களுக்கு நீர் செல்வதைத் தடுக்க வேண்டும்.

நோய்த் தாக்கம் காணப்படும் பிரதேசங்களிலும் சூழவுள்ள பகுதிகளிலும் யூரியா பசளையை குறைந்தளவில் பாவிக்க வேண்டும் அத்துடன் சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசினிகளான பவஸ்ரின் அல்லது புல்லெற் Qg -1, பொலிகோர், கினோசான் போன்றவற்றில் ஏதாவது ஒன்றை தாக்கம் காணப்படும் வயல்களுக்கும் சூழவுள்ள வயல்களுக்கும் தாமதமின்றி விசிற வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் அவ்வப பகுதி விவசாய போதனாசிரியர்களைத தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (28)

## கூடுதல் நிலப்பரப்பில் புகையிலைச் செய்கை

(மண்டைதீவு)

மண்டைதீவு கிராமத்தில் உள்ள தோட்டச் செய்கையாளர்கள் தமது புகையிலைத் தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை கையால், பனை ஓலைப் "பட்டைகளால்" நீர் அள்ளி ஊற்றி வந்தனர்.

நாற்றுக்கள் மிக வேகமாக வளர்ச்சியடைந்துள்ளதால் பாத்திகட்டி நீர் இறைப்பு இயந்திரங்களால் நீர் பாய்ச்சும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். பருவகால மழை வீழ்ச்சி காரணமாக புகையிலை நடுகை பிந்தி நடைபெற்றிருந்தது. எனினும் மழை வீழ்ச்சி யாழ்ப்பாணப் பகுதியைப் போல் கூடுதலாக இல்லாது அளவாகப் பெய்ததும் தொடர்ச்சியான 'மப்பு மந்தாரமான' காலநிலையாலும் வாய்ப்பாக அமைந்ததால் புகையிலைச் செடிகள் மிகத் துரிதமாகவும் செழிப்பாகவும் குறுகிய காலத்தில் வளர்ந்துள்ளன.

இந்த வருடம் கூடுதலான நிலப்பரப்பில் அதிகமானவர்கள் (கடந்த வருடங்களிலும் அதிகமாக) பயிரிட்டுள்ளனர். சிலர் வெங்காயப் பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்டுள்ளனர். (23)

## பட்டிப்பளைப் பிரதேச மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் கையளிப்பு

(வவுனியா)

வவுனியா பொதுவைத்தியசாலை உத்தியோகத்தர்கள் கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கபபட்ட பட்டிப்பளைப் பிரதேச மக்களுக்கு ஒரு தொகுதி நிவாரணப்பொருட்களை வழங்கியுள்ளனர்.

இதில் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் -வைத்தியர் கே.சத்தியமூர்த்தியின் பணிப்பின் பேரில் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருட்களை வைத்தியசாலை கணக்காளர் சி.மனோகரன், தாதியப் பரிபாலகா எஸ்.பாலநாதன் ஆகியோருடன் வைத்தியசாலை ஊழியர்களும் நேரடியாகச் சென்று பட்டிப்பளைப் பிரதேச செயலர் எஸ்.உதயநிதியிடம் கையளித்தனர். (30)

## பிரதி அஞ்சல்மா அதிபர் நியமனம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணப் பிரதி அஞ்சல்மா அதிபராகக் கடமையாற்றிய என்.இரத்தினசிங்கம் வடமாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

இதேவேளை முன்னர் தபால் மா அதிபர் அலுவலகத்தில் உயர் அதிகாரியாகப் பணியாற்றிய கே.கனகசுந்தரம் கிழக்கு மாகாணத்தின் பிரதி அஞ்சல் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# பௌர்ணமி தின கலை விழாக்கள் நடத்தப்படுவது பாராட்டத்தக்கது

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



(உடுவில்)

கடந்த 30 வருடங்களுக்கு முன்பு இதுபோன்ற கலை நிகழ்ச்சிகள் எமது பிரதேசத்தில் நடத்தப்பட்டபோதும் ஆயுத வன்முறை காரணமாக அவை நிறுத்தி வைக்கப்பட்டன. தற்போது நாட்டில் அமைதி நிலவிய காரணத்தினால் இந்நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. பௌர்ணமி தின முதலாவது கலைநிகழ்வை வடமாகாண கல்வித் திணைக்களம் நடத்தியமை பாராட்டுக்குரிய ஒன்றாகும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

எதிர்வரும் காலங்களில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளுடன் பல்வேறுபட்ட கலைஞர்களையும் இந்நிகழ்வுகளில் இணைத்து அவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மாணவிகளின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில், வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ஆர்.ராஜேந்திரன் வரவேற்புரையினை நிகழ்த்தியதுடன், வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் விக்னேஸ்வரன் தலைமையுரையாற்றினார்.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன், யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம், வன்னி மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அரியரட்ணம், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.ராஜேந்திரன், வடமாராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வராஜா, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் பிரேமகாந்தன், தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ராதாகிருஷ்ணன், மடு வலயக் கல்விப் பணிப்பாளர் சுகந்தி செபஸ்டியன், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் ஷிராணி மில்ஸ் ஆகியோருடன் கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பெருந்தொகையானோர் பங்கு கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து தமிழ்த் தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் விருது பெற்ற மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகளின் இன்னிசை கானமும், வட மத்திய மாகாணத்தில் இடம்பெற்ற மாற்று வலுவுள்ளோருக்கான சர்வ தேசப் போட்டியில் பங்குகொண்ட இராமநாதன் மகளிர் கல்லூரி வாழ்வகச் சிறுமியர்களின் நாட்டிய, கலை நிகழ்ச்சியும், மகாஜனக் கல்லூரி மாணவிகளின் கிராமிய நடனமும் மற்றும் கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. நாட்டிய நிகழ்ச்சிகளை வழங்கிய மாற்றுத்திறனுள்ள வாழ்வகச் சிறுவர், சிறுமியர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிதியுதவி வழங்கினார்.

## சுற்றாடல் அறிவூட்டல் வழிகாட்டி பாடசாலைகளுக்கு விநியோகம்

(அச்சுவேலி)

ஆசிரியர் அபிவிருத்தி மற்றும் வலுவூட்டல் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் பொருட்டு இலங்கை இடைநிலைப் பாடசாலைகளுக்கான சுற்றாடல் அறிவூட்டல் வழிகாட்டி, கல்வி அமைச்சினால் அனைத்துப் பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி சுற்றாடல் அறிவூட்டல் வழிகாட்டி நூலானது இடைநிலைக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்ட விஞ்ஞானப் போதனா சிறப்பறிஞர் தயாரத்ன வீரக்கோன் அவர்களினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் அப்பிரச்சினைகளை வெற்றிகொண்டு சூழலை காப்புச் செய்தல் தொடர்பாகவும், சுற்றாடல் பற்றிய வேறு பல அம்சங்களையும் உள்ளடக்கி பத்து அத்தியாயங்களாக உருவாக்கப்பட்டுள்ள இந்நூலைப் பாடசாலைகள் தோறும் நீண்ட நோக்கில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கல்வி அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (03)

## வீதிகளில் குப்பை கூழங்கள் போடுவதால் குடியிருப்பாளர்களுக்கு நுளம்புத் தொல்லை

(கொக்குவில்)

யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை அமைந்துள்ள சிற்றம்பலம் காடினர் (வேம்படி) வீதியில் குடியிருப்பு ஓரங்களில் பெருமளவு குப்பைகள் போடப்பட்டுள்ளன.

இதனால் பாடசாலைச் சிறார்கள் மற்றும் வாகனப் போக்குவரத்துக்கு குந்தகம் ஏற்பட்டிருப்பதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

வீதியில் போடப்பட்டுள்ள குப்பை கூழங்கள் அப்பகுதிக் குடியிருப்புகளில் இருந்தே போடப்பட்டுள்ளன. வாழை மரக்கழிவுகள், பழைய பாவனைப் பொருட்கள், பச்சைத் தென்னம் மட்டை, ஓலைக்கழிவுகள் பெருமளவில் வீதியோரத்தில் நிரப்பப்பட்டுள்ளன.

பிராணிகள் குப்பையைக் கிளறி வீதியெங்கும் சிதைத்து விடுவதால் மேலும் அவ்வீதிப் போக்குவரத்து பாதிக்கப்படுவதுடன் ஈ மற்றும் நுளம்புப் பெருக்கம் தோன்றவும் ஏதுவாகுமெனச் சுட்டிக் காட்டப்படுகிறது. (68)

## திருட்டு முயற்சி தோல்வி அடைந்ததனால் மோட்டார் சைக்கிளை சேதமாக்கிய திருடன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொதுநூலகத்தில் அண்மையில் பிற்பகல் வேளையில் இடம்பெற்ற திருட்டு முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

யாழ்.பொதுநூலகத்தின் பிரதான தரிப்பிடத்தில் தரித்து நின்ற புத்தம் புதிய மோட்டார் சைக்கிளைக் (Palzer 180) களவாடும் பொருட்டு திருடன் முயற்சி மேற்கொண்டுள்ளான்.

வண்டியின் பிரதான பூட்டை லாவகமாக வெட்டி அதனைத் திருட முயன்றுள்ளான். ஆனால் அவனது முயற்சி கைகூடவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த திருடன் தனது முயற்சி நிறைவேறாததால் மோட்டார் சைக்கிளைச் சேதப்படுத்தி விட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் வண்டி உரிமையாளர் தனது வேலை முடிந்ததும் வண்டியை வந்து பார்க்கும் போதுதான் இவ்விடயம் வெளிச்சத்துக்கு வந்தது.

மேற்படி சம்பவம் பாதுகாவலர் கடமையில் இருந்தபோதே இடம்பெற்றுள்ளதாகவும், இந்தச் சம்பவம் பிரதேசத்தின் பாதுகாப்பற்ற தன்மையை உறுதிப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பொதுப் பணிகளில் ஈடுபடும் படையினர்

(அச்சுவேலி)

புத்தூர் பிரதேச இராணுவத்தினர் பொதுமக்களுடன் இணைந்து புத்தூர் மற்றும் ஆவரங்கால் பிரதேசங்களில் பல்வேறு பொதுப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொதுமக்களுடன் நல்லுறவை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் இராணுவத்தினர் பொதுமக்களுடன் இணைந்து பல்வேறு சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு வருவதுடன் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக வீதியோரப் பற்றைகளை வெட்டியகற்றுவதிலும், வெறும் காணிகளைத் துப்புரவு செய்வதிலும், நுளம்பு பெருகும் இடங்களை இனங்கண்டு சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபடுவதுடன் பாடசாலைகள் மற்றும் சனசமூக நிலையங்கள் உள்ளிட்ட பொது நிறுவனச் சுற்றுச் சூழல் பிரதேசங்களையும் சிரமதானப் பணிகள் மூலம் சுத்தம்செய்து செப்பனிட்டு வருவதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (03)

## வட பகுதி வைத்தியசாலைகளில் 50 வைத்தியர்கள் நியமிக்கப்படுவர்

### சுகாதார அமைச்சர் தகவல்

(யாழ்ப்பாணம்)

ஒரு மாத காலத்துக்குள் ஐம்பது வைத்தியர்கள் வடபகுதி வைத்திய சாலைகளில் நியமனம் செய்யப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்த அவர், அங்கு ஜப்பான் அரசின் நிதியுதியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள மூன்று மாடிக் கட்டட நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்து அங்கு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-

2012 ஆம் ஆண்டுக்குள் யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவுகின்ற தாதியர் பற்றாக்குறை முழுமையாக நீக்கப்படும் எனவும், யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா தாதிகள் பயிற்சிப் பாடசாலைகளில் இருந்து தாதியர்கள் வெற்றிடம் நிரப்பப்படும் எனவும் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் பவானி பசுபதிராஜா மற்றும் வைத்திய நிபுணர் ரவிராஜ் ஆகியோர் இந்நிகழ்வின்போது, அமைச்சருடன் யாழ்.போதனா வைத்தியசாலையின் குறைபாடுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)



வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச. கொத்தணியினால் நவாலியில் அமைக்கப்படவுள்ள போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலைக் கட்டடத்திற்கான அடிக்கல்லை கூ.அ.உ.ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் நாட்டுகிறார்.

# யாழ் - றக்கா வீதி மக்களுடன் அமைச்சர் தேவானந்தா சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சுண்டுக்குளி றக்கா வீதியிலுள்ள பொது மைதானத்தை அண்மித்த பகுதி மக்களின் கோரிக்கையின் பேரில், அங்கு விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அப்பகுதி மக்களை நேரில் சந்தித்து உரையாடியுள்ளார்.

சனசமூக நிலையத் தலைவர் சுதர்ஸன் ஜோன் தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் அமைச்சரை வரவேற்று, தமது தேவைகள், பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகளை மகஜர்களாகவும், நேரடியாகவும் முன்வைத்தார்கள்.

குறிப்பாக கழிவுநீர் வடிகாலமைப்பினை ஏற்படுத்துதல், மின்சார வசதி அற்றவர்களுக்கு மின்சார இணைப்பு வழங்குதல், குப்பை அகற்றுதல், தெருவிளக்குப் போடுதல், இறைச்சி, மீன் கடைகளின் சுகாதாரம் மற்றும் பராமரிப்பு என்பன குறித்துக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மேலும் அப்பகுதி இளைஞர்கள் தினமும் மைதானத்தில் விளையாடும் நிலையில் அவர்கள் பாதிக்கப்படாதவாறு கரப்பந்தாட்ட மைதானத்தை அமைத்தல், றக்காவீதியையும் - தண்டவாளப் பகுதியையும் இணைக்கும் வீதிக்கு, சிறி ஞானவைரவர் வீதி எனப் பெயரிடுதல் போன்ற கோரிக்கைகளும் விடுக்கப்பட்டன.

மேற்படி கோரிக்கைகள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார். அப்பகுதி மக்களின் வேண்டுகோளின் பேரில் அவர்களுக்கு புத்தூக்கம் அளிக்கும் வகையில் இசை நிகழ்ச்சி ஒன்றினை யாழ். மாநகர சபையின் ஒத்துழைப்புடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடத்தவும் நடவடிக்கை எடுக்கும்படி அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

மற்றொருபுறம் விழிப்புக்குழு ஒன்றினை அமைப்பது தொடர்பாக அப்பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்றுத் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு யாழ். பொலிஸ் தலைமையகப் பொலிஸ் பரிசோதகரை அங்கு வரவழைத்த அமைச்சர், விழிப்புக்குழு அமைக்கும் பூர்வாங்கப் பணிகளையும் ஆரம்பித்து வைத்தார்.

இதேவேளை கடந்த ஐம்பது வருடங்களாக இளஞ்சிங்கம் சனசமூக நிலையம் என்ற பெயரில் இயங்கிய நிலையில் புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக இளங்கதிர் எனப் பெயர் மாற்றப்பட்ட அந்நிலையத்தை, அனைத்துக் குடியிருப்பாளர்களினதும் சம்மதத்துடன் மீண்டும் இளங்சிங்கம் சனசமூக நிலையம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டமை முக்கிய விடயமாகும்.

இச்சந்திப்பில் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, பிரதி முதல்வர் துரைராஜா இளங்கோ, றீகன், யாழ். பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, யாழ். மாநகர சபைப் பொறியியலாளர் ஹென்ஸ்டன், யாழ். கரப்பந்தாட்ட சங்க நிர்வாகிகள் உட்பட அப்பகுதிப் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் விசுவமடுப் பகுதியில் கசிப்பு வேட்டை

(கிளிநொச்சி)

விசுவமடுப் பகுதியில் இம்மாதம் பெருந்தொகையான கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையுடன் சம்பந்தப்பட்டவர் கைது செய்யப்பட்டுள்ள தாகவும் விசுவமடுப் பொலிஸ் நிலைய அதிகாரி அபயசேகர தெரிவித்தார்.

இவ்வருட ஆரம்பத்திலிருந்து கிளிநொச்சி போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவுப் பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில் விசுவமடு கல்லாறுப் பகுதியில் 25 போத்தல் கசிப்பும், அதேயிடத்தில் 14 போத்தல் கசிப்பினைப் பெண்ணொருவரிடமிருந்து கைப்பற்றியதுடன் றெட்பானாவில் 47 போத்தல் கோடாவும், பிரமந்தனாறுப் பகுதியில் 180 போத்தல் கோடாவும் கைப்பற்றப்பட்டது.

இதேவேளை, இக் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 17 நபர்களைக் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தின் சட்ட நடவடிக்கைகளுக்காக முற்படுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (69)

## தமிழ்ச் சிறுகதைப் போட்டியில் ஸ்கந்தா மாணவன் 2 ஆம் இடம்

(தெல்லிப்பளை)



தமிழ்த்தினச் சிறுகதைப் போட்டியில் தேசிய மட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவன் விமலாம்பிகைபாகன் திவாகரன் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் ஆகிய மட்டங்களில் முதலாம் இடம்பெற்றபோதும், அகில இலங்கை ரீதியில் வயதுகூடியவர்களுடன் போட்டியிட்டு வெற்றி பெற்றதில் மகிழ்ச்சி அடைவதாகக் கூறிக்கொள்ளும் திவாகரன், தனது வெற்றிக்கு வழிவகுத்த ஆசிரியர், ம.பா.மகாலிங்கசிவம், பாடசாலை அதிபர் ஆறுதிருமுருகன், பெற்றோர்கள் மற்றும் கல்லூரிச் சமூகம் ஆகியோரை நினைவுகூருவதாகவும் தெரிவித்தார். (44)

## வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு விசேடமாக மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது

(அரியாலை)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பிரசித்தி வாய்ந்த கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு முல்லைத்தீவிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

முல்லைத்தீவு நகரத்திற்கு மின் ஒளி வழங்குவதற்காக அங்கு அண்மையில் பாரிய மின் பிறப்பாக்கிகள் பொருத்தப்பட்டன.

இந்த மின் பிறப்பாக்கிகளில் இருந்து விசேடமாக அமைக்கப்பட்ட தூண்களின் மூலம் வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவிலுக்கு மின்சார வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நந்திக் கடலூடாக இந்த மின் இணைபபு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடலின் மத்தியில் கொட்டி நிரப்பப்பட்ட திண்மக் கழிவுகள் மற்றும் கட்டட இடிபாடுகளின் மத்தியிலேயே மின்கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன. இதனால் இந்தத் திருக்கோவில் 24 மணி நேரமும் மின்சார வசதியைப் பெற்றுள்ளது.

அண்மையில் வன்னிக்கு விஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் விசேட ஏற்பாட்டின் பேரிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (23)

## அதிபராக நியமனம்

(யாழ்ப்பாணம்)



வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக திருமதி சிறிதரன் பாலராணி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட சாலையின் பழைய மாணவி என்பதுடன், யாழ். மத்திய கல்லூரியின் பிரதி அதிபராகக் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (30)

## செல்வச்சந்நிதியில் தைப்பூசத் திருவிழா

(தும்பளை)

தொண்டைமானாறு செல்வசந்நிதி ஆலயத்தில் தைப்பூசத் திருவிழா கடந்த வியாழக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அடியார்கள் காவடி, கற்பூரச்சட்டி என்பன எடுத்து தமது நேர்த்திக்கடனைச் செலுத்தினார்கள்.

இதில் பெரும எண்ணிக்கையான பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களைச் செலுத்தினர். அத்துடன், பல திருமண வைபவங்களும் ஆலய வள்ளியம்மை மண்டபத்தில் நடைபெற்றதாகவும் ஆலயச்சூழலில் அமைந்துள்ள அன்னதான மடங்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதை விட, அன்றையதினம் அடியார்க ளின் நலன்கருதி இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (62)



யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச் வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்ற கால்கோள் விழாவில் வித்தியாலய அதிபர் செ.இராமநாதன் மங்கல விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். வலய அழகியல் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சற்குணராசா மாணவிக்குப் பரிசில் வழங்குவதையும் காணலாம். (30)

## இன்றைய பலன்

(23.01.2011 ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புகள்**

விகிர்தி தை 09

இராகுகாலம் 5.06– 6.36, சுபநேரம் 9.36 –11.06,
சதுர்த்தி மு.இ.7.18, பூரம் மாலை 6.33,
சித்தாமிர்தம், சங்கடஹர சதுர்த்தி விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

–ஆதினி–

**மேடம்:**– காணிபூமியால் இலாபம், பணவரவு, மகிழ்வு.

**ரிஷபம்:**– உபதேசஞ் செய்தல், உதவி செய்தல், மதிப்பு உயரல்.

**மிதுனம் :**– திடமான முடிவெடுத்தல், முயற்சி வெற்றி, பகைவர் நேசம்.

**கடகம்:**– பொறாமைப்படல், காரிய அலைச்சல், கௌரவம் பாதிப்பு.

**சிம்மம்:**– உதவிகள் செய்தல், மதிக்கப்படுதல், காரிய வெற்றி.

**கன்னி :**– அவமானப்படல், சோதனைக்குட்படல், முடிவெடுக்க முடியாத நிலை.

**துலாம் :**– ஊக்கமிகுதி, காரியவெற்றி, மதிக்கப்படல்.

**விருச்சிகம் :**– மன்னித்தல், எதிரிகள் நேசம், நீண்டதூரப் பயணம்.

**தனுசு:**– போட்டிகளில் வெற்றி, பணவரவு, இனசனச் சேர்க்கை.

**மகரம்:**– சுறுசுறுப்பான நிலை, தேக ஆரோக்கியம், மேலோர் நட்பு.

**கும்பம் :**– இனசன ஆதரவு, நண்பர் உதவி, நற்செய்தி கிடைத்தல்.

**மீனம்:**– பாராட்டப்படல், குடும்பத்தில் மகிழ்ச்சி, பெரியோர் ஆசி.

# வேட்பு மனுத்தாக்கல் செய்வதில் அரசியல் கட்சிகள் மும்முரம்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் இரண்டு உள்ளூராட்சிச் சபைகளுக்கும், திருமலை மாவட்டத்தில் ஒரு உள்ளூராட்சி சபைக்குமாக மூன்று வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவிக்கிறது.

கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகம பிரதேச சபைக்கும் கெஸ்பாவ பிரதேச சபைக்கும் ஜனசெத பெரமுன வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

திருகோணமலை மாவட்டதில் கிண்ணியா நகர சபைக்கு எம்.எம்.ரிஸ்வான் மொஹமட் தலைமையிலான சுயேச்சைக் குழு வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளது எனத் தேர்தல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கும் வாக்காளர்கள் விண்ணப்பிக்கும் திகதி மேலும் நீடிக்கப்படாது என்றும், 27 ஆம் திகதி வரையே எவ்விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை. கட்சிகளாகப் பதிவு செய்வதற்கு விண்ணப்பித்த அரசியற் கட்சிகளின் விண்ணப்பங்களில் 84 விண்ணப்பங்களைத் தேர்தல்கள் திணைக்களம் நிராகரித்துள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு மே மாதம் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு அமைய விண்ணப்பித்த கட்சிகளிலேயே 84 கட்சிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

# ரவிசங்கர் குருஜி நாமல்ராஜபக்ஷவுக்கு பொன்னாடைபோர்த்திக் கௌரவித்தார்



(கொழும்பு)

இலங்கை வந்துள்ள வாழும் கலை அமைப்பின் தலைவர் ரவிசங்கர் குருஜி ஜனாதிபதியின் மூத்த புதல்வர் நாமல் ராஜபக்ஷவுக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ சிறந்த சமூக சேவைகளை முன்னெடுப்பதாகப் பாராட்டியே ரவிசங்கர் குருஜி அவருக்குப் பொன்னாடை போர்த்தியுள்ளார்.

2600 வது வருட புத்த ஜயந்தியை முன்னிட்டு இளைஞர்களுக்கான நாளைய அமைப்பும்,வாழும் கலை அமைப்பும் இணைந்து அறநெறி நிகழ்ச்சியொன்றை முன்னெடுத்துள்ளன. கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் அதன் ஆரம்ப வைபவம் இடம் பெற்றது.

எதிர்வரும் காலங்களில் வாழும் கலை அமைப்பின் செயற்பாடுகளை இளைஞர்களுக்கான நாளை அமைப்புடன் இணைத்து முன்னெடுப்பது குறித்தும் இருவரும் கலந்தாலோசித்துள்ளதாகவும் அறியவருகிறது.

# பால்மா விலை உயரலாம்

(கொழும்பு)



பால்மா விலையை உயர்த்துவதற்கு பால்மா நிறுவனங்கள் அனைத்தும் அனுமதி கோரியுள்ளதாக வர்த்தக விவகார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அனைத்து பால்மா நிறுவனங்களும் கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து பால்மா விலையை உயர்த்த அனுமதி கோரி வருகின்றன. மெலி போன்ற உள்ளூர் நிறுவனங்கள் தாம் நஷ்டத்தை அனுபவிப்பதாகக்கூறி அரசாங்கத்திடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளன என அமைச்சர் தெரிவித்தார்.

இக்கோரிக்கை தொடர்பாக பால்மா நிறுவனங்களுக்கும் அமைச்சுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு மேலதிக நிவாரணம் மீள்கட்டுமானப்பணிகளுக்கு அதிகாரிகள் குழு நியமனம்

## அனுரபிரிய தர்ஷனயாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு,கிழக்கு உட்பட சில மாகாணங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாகப் பாதிக்கப்பட்ட சகலருக்கும் மேலதிக நிவாரணம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கென தற்போதைய சுற்றறிக்கை அறுவுறுத்தல்களைத் தளர்த்தியும், வருமானத்தைக் கருத்திற் கொள்ளாமலும் நிவாரணம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்காக 10 அமைச்சுகளின் அதிகாரிகள் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர முன்வைத்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சர் அனுர பிரிய தர்ஷன யாப்பா தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு,வடமத்திய மாகாணங்களிலும் அதேபோல் மத்திய,ஊவா மாகாணங்களிலும் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தில் 2 இலட்சத்து 8ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 10 இலட்சத்து 61ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் அனைவருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் தேவையான புகலிடம் மற்றும் சமைத்த உணவு, உலருணவு போன்ற உடனடித் தேவைகள், அனைத்து உதவிகளையும் அரசாங்கம் பெற்றுக் கொடுத்ததாகவும் அமைச்சர் அமரவீர அறிவித்துள்ளார்.

# இலங்கைக்கு விஜயம் செய்ய இருந்த நோர்வே நாட்டவர் இருவருக்கு விசாமறுப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதான ஒப்பந்தம் தோல்வியுற்றமைக்கான காரணம் குறித்து ஆராய இலங்கை வரமுயன்ற நோர்வே நாட்டவர் இருவருக்கு அரசாங்கம் விசா வழங்க மறுத்துள்ளது.

2002 ஆம் ஆண்டில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்தின் தோல்வி குறித்து ஆராய நோர்வே நாட்டின் அரச சார்பற்ற நிறுவனமொன்றின் பிரதானிகள் இருவர் அண்மையில் இலங்கைக்கான விஜயத்துக்கு விசா அனுமதி கோரியிருந்தனர்.

நோர்வேயில் இயங்கும் மிசல்சன் எனும் அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவர் குனார் சோபார் மற்றும் அவரது பிரதி அதிகாரி ஆகியோரே அவர்களாவர். ஆயினும் அரசாங்கம் அவர்களுக்கான விசா அனுமதியை மறுத்துள்ளது.

சமாதான ஒப்பந்தத்தின் தோல்வி குறித்து ஆராய்வதற்கான பொறுப்பை நோர்வே அரசாங்கமே அவர்களிடம் ஒப்படைத்துள்ளதாக அரசாங்கத்துக்குச் சந்தேகம் எழுந்துள்ளதன் காரணமாகவே அவர்களுக்கான விசா மறுக்கபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# வெலிக்கடை சிறைச்சாலையில் "ஜாமர்" யந்திரம் பொருத்தும் பணிஆரம்பம்

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசி அலைவரிசைகளைத் தடை செய்யும் ஜாமர் இயந்திரமொன்றை சிறைச்சாலைகளில் பொருத்த சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக வெலிக்கடை சிறைச்சாலையில் ஜாமர் இயந்திரம் பொருத்தும் பணிகள் கடந்த 20 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜாமர் இயந்திரம் பொருத்தப்பட்டபின் சிறைச்சாலைக்குள் எந்தவொரு கையடக்கத் தொலைபேசியும் இயங்காத வண்ணம் தடைசெய்யப்படும்.

சிறைச்சாலைக்குள் இருக்கும் கைதிகள் அங்கிருந்து கொண்டே கையடக்கத் தொலைபேசி ஊடாக வெளியுலகத் தொடர்பு கொள்வது, சிறையிலிருந்தபடியே குற்றச் செயல்களைத் திட்டமிடுதல் மற்றும் வழிநடத்தல் என்வற்றைத் தடுக்கும் நோக்குடனேயே ஜாமர் இயந்திரங்கள் பொருத்தப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்போதைக்கு இலங்கையின் பிரதான சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ள பெரும்பாலான கைதிகள் திருட்டுத்தனமாக கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தி வருவது கண்டறியப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அதனை முற்றாக இல்லாதொழிப்பதற்கு ஜாமர் இயந்திரம் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் ஏனைய சிறைச்சாலைகளிலும் ஜாமர் இயந்திரம் பொருத்தும் பணி மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# விலைப்பட்டியலை காட்சிக்கு வைக்காத விற்பனை நிலையங்கள் மீது கடும் நடவடிக்கை!

## கூட்டுறவு வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

உணவுத் தட்டுப்பாடொன்று ஏற்படாதவாறு சகல உணவு வகைகளையும் அத்தியாவசிய உணவு வகைகளையும் கையிருப்பில் வைத்திருப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளது என கூட்டுறவு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார். தற்போது ஒரு இலட்சத்து 85,000 மெற்றிக் தொன் நெல் கையிருப்பில் இருக்கிறது எனத் தெரிவித்த அமைச்சர் ஜோன்ஸ்டன், அரிசி தட்டுப்பாடு ஏற்படமாட் டாது என்றும் கூறினார்.

அத்துடன் ஏற்கனவே அறிவித்ததன்படி சகல வர்த்தக நிலையங்களிலும் விற்பனை செய்யப்படும் பொருட்களின் சில்லறை விலை காட்சிக்கு வைக்கப்படல் வேண்டும் என்பது கடுமையாகக் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

இல்லையேல் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் பழவகைகள், காய்கறி வகைகளை லொறிகளில் ஏற்றிச் செல்லும்போது பிளாஸ்டிக் பெட்டிகள் போன்று அனுமதிக்கப்பட்டுள்ள கொள்கலன்களின் மூலமே கொண்டு செல்லவேண்டும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் ஜோன்ஸ்டன் மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாணத்தில் அதிகளவிலான சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டன

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் அதி களவிலான சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சமாதான காலத்தின் பின்பு முன்னிருந்த சோதனைச் சாவடிகள் 30, முன்பே அகற்றப்பட்டதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

மீதமுள்ள சோதனைச் சாவடிகளைப் படிப்படியாக அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்ததுடன், கொழும்பில் உள்ள அநேகமான பாதுகாப்பு சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டதினையும் அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

# தொலைக்காட்சி நிறுவனங்கள் மூலம் 658மில். ரூபா வரியாக கிடைத்துள்ளது

(கொழும்பு)

10 தொலைக்காட்சி நிறுவனங்கள் கடந்த ஐந்து வருடங்களில் வெளிநாட்டுத் திரைப்படம்,நாடகங்கள் மற்றும் விளம்பரங்களை ஒளிபரப்பியதற்காக 658 மில்லியன் ரூபாவை வரியாகச் செலுத்தியுள்ளதாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவின் கேள்விக்குப் பதிலளிக்கும் முகமாகவே இத்தகவல்கள் வெளியிடப்பட்டன.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி, மஹாராஜா நிறுவனம் அதி கூடிய தொகையாக 389 மில்லியன் ரூபாவையும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் 89 மில்லியன் ரூபாவையும் குறித்த காலப்பகுதியில் செலுத்தியுள்ளன.

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் 50 மில்லியன் ரூபா, ஈ.ஏ.பி தனியார் நிறுவனம் 63 மில்லியன் ரூபா, ஈ.ஏ.ரி.நிறுவனம் 34 மில்லியன் ரூபா,குளோபல் நெற்வேர்க் நிறுவனம் 500,000 ரூபா ஆர்ட் தொலைக்காட்சி நிறுவனம் 15 மில்லியன் ரூபா, வொய்ஸ் ஒப் ஏசியா 39,000 ரூபா, பவர் ஹவுஸ் 13 மில்லியன் ரூபா,எம்.ஜி. எம்.ஆர்.நிறுவனம் 1.2 மில்லியன் ரூபாவும் செலுத்தியுள்ளன.

# நியூசிலாந்து அபார வெற்றி



(வெலிங்டன்)

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து அணி ஒன்பது விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆறு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரின் முதலாவது போட்டி நேற்று வெலிங்டன் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய களமிறங்கிய பாகிஸ்தான் அணி, சௌத்தியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களை இழந்தது. இறுதியில் 37.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மிஸ்பா உல் ஹக் 50, யுனிஸ்கான் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சௌத்தி ஐந்து, பென்னீற் மூன்று, ஜேக்கப் ஓரம் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 125 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி, 17. 2 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ரைடர் 55 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் குப்ரில் 40, ரெய்லர் 23 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக சௌத்தி தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் ஆறு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் 1-0 என்ற கணக்கில் நியூசிலாந்து அணி முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, டெஸ்ட் தொடரை 0-1 என்ற கணக்கில் இழந்த நியூசிலாந்து அணிக்கு இவ்வெற்றி பெரும் உந்து சக்தியாக அமையும் எனவும், அடுத்து வரும் போட்டிகளிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் எனவும் விளையாட்டு விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

# 48 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வெற்றி



(போர்ட்எலிசபெத்)

இந்திய அணிக்கெதிரான நான்காவது ஒரு நாள் போட்டியில் டக்வெட் லூயில் அடிப்படையில் 48 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது.

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஐந்துபோட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் நான்காவது போட்டி போர்ட்எலிசபெத் மைதானத்தில் நேற்று முன்தினம் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டுமினி ஆட்டமிழக்காது 71 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் அம்லா 64, போத்தா 44, பீற்றர்சன் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யுவராஜ்சிங் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.


பதிலுக்கு 266 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி 32.5 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழையால் ஆட்டம் கைவிடப்பட்டது. இதில் ஹோலி ஆட்டமிழக்காது 87 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ரெய்னா 20 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பீற்றர்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்நிலையில் டக்வெத் லூயில் அடிப்படையில் 48 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக டுமினி தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் இரு அணிகளும் 2-2 என்ற கணக்கில் சமனிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்து அணியின் பந்து வீச்சு விரைவில் பலமானதாக அமையும்!

## டொனால்ட் நம்பிக்கை



(ஹமில்டன்)

நியூசிலாந்து அணியின் பந்து வீச்சை விரைவில் பலமானதொரு நிலைக்குக் கொண்டு வருவதே எனது இலக்காகும். இந்த இலக்கை விரைவில் எட்டிவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இவ்வாறு தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரும், நியூசிலாந்து அணியின் புதிய பந்து வீச்சு பயிற்சியாளருமான டொனால்ட் தெரிவித்துள்ளார். நியமனத்தின் பின் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் அவர் குறிப்பிடுகையில்,

இந்த வாய்ப்புக்காக நான் நீண்ட நாள் காத்திருந்தேன். அதேவேளை ஒரு நாள் கிரிக்கெட்டில் இருக்கும் பிரச்சினைகளையும் நான் அறிவேன்.

அதை விட என்னால் சிறந்த பயிற்சியினை அணி வீரர்களுக்கு வழங்க முடியும் என நான் நம்புகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

உலக கிண்ணப் போட்டிகள் ஆரம்பிக்கவிருக்கும் இத்தருணத்தில் நியூசிலாந்து அணியின் பந்து வீச்சினை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு டொனால்டுக்கு இருப்பதாக கிக்கெட் விமர்சகர்கர்கள் தெரிவிக்கின்றனர்.

# குறுகிய காலத்தில் நிறைவுபெறும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர்!




(டுபாய்)

2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியைக் குறுகிய காலத்திற்குள் முடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது. இது குறித்து அது தெரிவித்துள்ளதாவது, 2007ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகள் நீண்ட நாட்களாக நீடித்ததாகப் பரவலான விமர்சனங்கள் எழுந்தன. இதன்படி உலகக் கிண்ணப் போட்டி வடிவத்திலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டி போன்று இம்முறை போட்டிகள் ரவுன்ட் ரொபின் சுற்று அடிப்படையிலேயே நடைபெறவுள்ளது.

இதற்கமைய உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்கும் 14 நாடுகளும் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு ஆரம்பச் சுற்றில் மோதும். இந்தச் சுற்றில் ஒரு அணி மற்றைய அணிகளுடன் தலா ஒரு தடவை மோதவுள்ளன.

எனவே, ஆரம்பச் சுற்றில் ஓர் அணிக்கு 6 போட்டிகள் கிடைக்கின்றன. தொடர்ந்து இரண்டு பிரிவுகளிலும் முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் காலிறுதிக்கு முன்னேறும். நான்கு காலிறுதிப் போட்டிகளில் இரண்டு ஆட்டங்கள் பங்களாதேஷில் நடைபெறவுள்ளதோடு, இலங்கை, இந்தியாவில் தலா ஒவ்வொரு போட்டி நடைபெறும். அரையிறுதிப் போட்டிகள், இலங்கை, இந்தியாவிலும், இறுதிப் போட்டி இந்தியாவின் மும்பை வென்கட் மைதானத்திலும் நடைபெறும் என்றுள்ளது.

## இலங்கைக்கு மூன்று பில்லியன் வருமானம்

(கொழும்பு)

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் மூலம் மூன்று பில்லியன் ரூபா வருமானம் கிடைக்கும் என்று இலங்கை கிரிக்கெட்டின் செயலாளர் நிஸாந்த ரணதுங்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, மூன்று நாடுகள் இணைந்து இந்த பத்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை நடாத்துகின்றோம். இந்தத் தொடரின் அதிகளவான போட்டிகள் இந்தியாவில் நடைபெறுகின்றன. அதற்கு அடுத்தபடியாக இலங்கையிலேயே நடைபெறுகின்றது. இலங்கையில் நடைபெறும் போட்டிகளின் மூலம் 3 பில்லியன் ரூபா வருமானம் கிடைக்கும்.

அத்துடன் இலங்கையில் நடைபெறவுள்ள போட்டி மைதானங்கள் அனைத்தும் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றார்.




# வலிகாமம் கல்வி வலயக் கால்பந்தாட்டம்

# மகாஜனா, ஹென்றியரசர் அணிகள் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டித் தொடர்களில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மற்றும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணிகள் இறுதிப் போட்டியில் வென்று சம்பியனாகியுள்ளன.

வலிகாமம் கல்வி வலயத்தினால் நடாத்தப்பட்டு வரும் 17 வயதுப் பிரிவு மற்றும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டித் தொடர்களிலேயே மேற்படி அணிகள் இறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்று சம்பியனாகியுள்ளன.

வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டங்கள் நேற்று நடைபெற்றன.

இதில் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும், ஏழாலை சிறி முருகன் பாடசாலை அணியும் மோதின. இறுதி வரை விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் மகாஜனாக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது.

17 வயதுப் பிரிவினருக்கான மூன்றாமிடத்திற்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் 1-1 என்ற கோல் கணக்கில் இரு அணிகளும் இருந்தமையால் சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் 2-1 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.


இதேவேளை, 19 வயதுப் பிரிவினருக்கான போட்டியும் நேற்று இதே மைதானத்தில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மோதின. விறுவிப்பாக நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில், 1-0 என்ற கோல் கணக்கில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவானது.

19 வயதுப் பிரிவினருக்கான மூன்றாமிடத்திற்கான போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும், வட்டு. மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே தாக்குதல் ஆட்டத்தை வெளிப்படுத்திய மகாஜனாக் கல்லூரி அணி, 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். நடராசா தலைமையில் பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர். இராஜேந்திரன் மற்றும் வட்டுக்கோட்டைத் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இத்தொடரில் வலயத்திற்குட்பட்ட அனைத்து அணிகளும் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியை பெருமளவான ரசிகர்கள் கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்)

## சவாலான அணியாக இந்தியா திகழுமாம்



(பெங்களூர்)

உலகக் கிண்ணத்தை வெல்லக்கூடிய அதிக வாய்ப்பு இந்திய அணிக்கு உள்ளதென மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் லாறா தெரிவித்தார்.

பெங்களூரில் சிறுவர்களுக்கான பயிற்சியை வழங்கிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் பங்கேற்கும் இந்திய அணி சிறப்பான ஒரு அணியாக உள்ளது. வலுவான வீரர்களை அணிக்குத் தேர்வு செய்துள்ளனர்.

எனவே இந்திய அணி ஏனைய அணிகளுக்குப் பெரும் சவாலாக இருக்கும். கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பும் அணிக்கு உள்ளது என்றார்.

# உள்ளதைச் சொல்லுறேனுங்கோ..!

"செம்மையில் அறம் செய்யாதார்
திரவியம் சிதற வேண்டி
நம்மையும் கள்ளும், சூதும்
நான்முகன் படைத்தவாறே..."

என்னடா வந்தது வரக்குமுன்னம் இந்தச் 'சீனாச்சீனா' செய்யுளோடை, பாட்டோடை வந்து செப்புகிறானேயெண்டு நீங்கள் சிரிக்கிறியள் போலக் கிடக்குது. சரி சிரியுங்கோ!

நான் செய்யுளோடை வந்தாலும், செருப்போடை வந்தாலும் ஒரு கருத்தோடைதான் வருவன் எண்டது இஞ்சை கன பேருக்குத் தெரியாத சங்கதி.

ஹி... ஹி... ஹி... ஹி...

சரி அதை விடுவம். நான் இப்ப விசயத்துக்கு வாறன். நான் இப்ப சொன்ன அந்தச் செய்யுளின்ர கருத்து என்னெண்டு தெரியுமே? தெரியாட்டி சொல்லுறன் கேளுங்கோ.

போன ஜென்மத்தில மனிசராப் பிறந்தவங்கள் ஒழுங்காத் தானதருமம் செய்யாமல் செத்தால், மறுபிறப்பில திரும்பவும் மனிசராப் பிறந்து பழைய கணக்கு - வழக்குகளை முடிக்கிறதுக்காக கஷ்டப்பட்டு உழைக்கிற காசெல்லாத்தையும் குடிவெறியிலும் சூதாட்டத்திலும் செலவழித்தே ஆக வேண்டுமாம்.

**"நம்மையும் கள்ளும் சூதும் நான்முகன் படைத்தவாறே..."** எண்ட வரி உதைத்தான் சொல்லுது.

இதை இப்பத்தேயாக்கள் ஏற்றுக் கொள்ளுகினமோ இல்லையோ நான் ஏற்றுக் கொள்ளுறன். ஏனெண்டால் என்ர வாழ்க்கையின் அனுபவங்கள் அப்படி!

வாழ்க்கையில ஈயாதவன் சந்ததி எழும்பி நிண்டதில்லை.

இருப்பதைப் பகிர்ந்து கொடுத்தவன் படுக்கையில் இழுபட்டுச் செத்ததில்லை.

தேயாத தேட்டமும் தேடி வந்த புகழுமாய் சாயாத மானத்தோடு, சந்ததி வாழக் கண்ட பலபேரை நான் என்ர வாழ்க்கையில பார்த்திருக்கிறன். இதுக்கு என்ன காரணம் தெரியுமே? அறச்செயலும், ஆண்டவனுக்குப் பயந்த சுபாவமும்தான்.

"உவர் சின்னச்சாமி சொல்லுறதைப் பார்த்தால், ஊருலகத்தில நாங்கள் ஒருத்தரும் தானம் தருமம் செய்யாமல் சீவிக்கிறம் எண்ட மாதிரியல்லோ கிடக்குது..." எண்டு எடுத்தெறிஞ்சு பேச வராதையுங்கோ.

உதாரணத்துக்கு ஒரு சம்பவம் சொல்லுறன் கேளுங்கோ.

வன்னியில என்ர சகபாடியின்ர தூரத்து உறவுக்காரி ஒருத்தி இருந்தவள். இவள் இப்ப செத்துப் போனாள். சரியான பிசினி. ஆகப்போகச் சமைக்கமாட்டாள். சாப்பிட்டுக் கொண்டிருக்கேக்கை காகம், கோழி வந்தாலும் உடன சாப்பாட்டுக் கையால கலைக்கமாட்டாள். கைவிரல்களுக் கிடையில கிடக்கிற சோத்துப் பருக்கையள் விழுந்திடுமெண்டு விரலுகள் எல்லாத்தையும் அவசரமாக நக்கு நக்கெண்டு நக்கி... சூப்பி... தண்ணியில கழுவின கைமாதிரி வந்தாப் பிறகுதான் காகம் கோழியளைக் கலைப்பாள்.

இந்த யுகத்தில இப்படியும் ஒரு பொம்புளையோ எண்டு உங்களுக்கு நம்பக் கஷ்டமாயிருக்கும் என்ன! இது என்ர வாழ்க்கையில கண்டு அனுபவிச்ச உண்மை. உள்ளபடி சொல்லுறன்.

இவளின்ர வீட்டுக்கு ஒரு பிச்சைக்காரன் போகேலாது... அண்டை அயலுகள் ஒரு ஐம்பது நூறு கடனாகக் காசு வாங்கப் போகேலாது... ஒரு அந்தரத்துக்கு உப்புப்புளி, தேங்காய்ப்பாதி ஒண்டும் வாங்கேலாது... இப்படிச் சேர்த்து வைச்ச பொருள் பண்டமெல்லாம் கடைசியில எங்கை போனது? உடுத்த உடுப்போடை வலையன் மடத்திலயிருந்து வெள்ள முள்ளி வாய்க்காலுக்கு ஓடிவாற வழியில 'ரவுண்ஸ்' பட்டுச் செத்துப் போனாள்.

**"காதற்ற ஊசியும் வராது கடைசி வழிக்கே..."** எண்டு பட்டினத்தார் பாடிக்காட்டிவிட்டுப் போனது உதுக்குத்தான்.

இப்படியான ஆட்கள்தான் மறுபிறப்பில திரும்பவும் மனிசராப்பிறந்து, முற்பிறப்பின் அறம் செய்யாத பாவத்திற்கு குடித்தும் சூதாடியும் பணத்தைச் செலவழிக்க வேண்டுமெண்டு செய்யுள் சொல்லுது.

**"செம்மையில் அறம் செய்யாதார் திரவியம் சிதற வேண்டி..."** எண்ட வரியைக் கொஞ்சம் உற்றுநோக்கினால் அதன் உண்மை புரியும்.

செம்மையில் அறம் செய்யாத ஆட்களை நான் அடிக்கடி தெருவுகளில பஸ்சுகளில சந்திக்கிறனான்.

போன வருசக் கடைசியில கைதடிக்குப் போறதுக்காக பின்னேரம்போல வஸ்தியன் சந்தியில பஸ்சுக்கு நிண்டனான் பாருங்கோ. ஒரு மினிபஸ் வந்தது. ஏறுகிற வாசல்ல நிறையச் சனம். ஆனா பின்னக்கு இடைவெளிகிடக்குது. சனம் ஏன் பின்னுக்குப் போகாமல் நிற்குதெண்டு பார்த்தால் வழியில ஒரு ஆள் நல்ல 'மப்பில' இருந்தார்.

நடத்துனர் பொடியனும் எவ்வளவோ சொல்லிப்பார்த்தான். ஆள் கேட்கிற மாதிரி இல்லை. கொடிகாமம் போற பஸ்சில ஏறி இருந்துகொண்டு தன்னை மட்டக்களப்பில இறக்கி விடச்சொல்லி பொடியனோடை சண்டை பிடிச்ச கதை இப்படிக்கிடக்க, இப்ப ஒரு மாசத்துக்கு முன்னம் எண்டு நினைக்கிறன்... யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால ஒருவர் வெறியில செத்த பிணம் மாதிரிக் கிடந்ததை பேப்பர்காரர் படம் பிடிச்சு பேப்பரில படம் போட்டிருந்தவை. பாத்தனீங்களே?


செம்மையில அறம்செய்யாமல் கள்ளுக்கும் சூதுக்கும் செலவழிக்கிற ஆட்களைப் பார்க்க வேணுமெண்டா பின்னேரகையில உந்தப் பஸ்சுகளுக்கை இருந்து போவினம். தாராளமாய் பார்க்கலாம்.

வாறியளே...! ஒருக்காப் போய் பார்த்திட்டு வருவம் ?

ஹி... ஹி... ஹி...ஹி...

-சின்னக்குட்டி சின்னச்சாமி.

# பிரிட்டன் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் ஐந்து மணி நேரத்துக்கு மேலாக விசாரணை



நீண்ட நாட்களாகப் பிரித்தானிய மக்கள் பலரால் எதிர்பார்க்கப்பட்ட ஈராக் போர் குறித்த விசாரணை நேற்று நடைபெறுவதாக இருந்தது. ரொனி பிளேயருக்கு எதிரான கோஷங்களுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் பலர் விசாரணை நடைபெற்ற இடத்தில் குவிந்ததால் ரொனி பிளேயர் விசாரணை நடைபெறும் இடத்திற்கு வருவாரா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்றாகவே இருந்தது.


2003 இல் ஈராக் மீதான போரை ஆரம்பிக்க ரொனி பிளேயர் காரணமாக இருந்தார் என்பதே இவர் மீதுள்ள முக்கியமான குற்றச்சாட்டு. குறிப்பிட்ட நேரத்திக்கு முன்னதாகவே விசாரணை நடைபெறும் இடத்திற்கு ரொனி பிளேயர் வந்து சேர்ந்தார். சுமார் 5 மணி நேரங்களுக்கும் மேலாக அவரிடம் பல கேள்விகள் கேட்கப்பட் டுள்ளதாகத் தெரிகிறது.

இந்தப் போர் நடைபெற்ற சமயத்தில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷிற்கு ரொனி பிளேயர் எழுதிய கடிதங்களின் விபரங்களும், லார்டு கோல்ட்ஸ்மித் அளித்த சட்ட ஆலோசனைகளும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இது வரையிலும் இந்த விபரங்களை ரொனி பிளேயர் இரகசியமாக வைத்திருந்தார். தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் விசாரணையில் அனைத்தும் அம்பலமாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஈராக் போர் தொடர்பாக ரொனி பிளேயரிடம் நடத்தப்படும் இரண்டாவது விசாரணை இது என்பது குறிப்பிடத்தக்கது.

விசாரணையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ரொனி பிளேயர் அளித்த பதில்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு சாட்சியமாக வைக்கப்பட்டுள்ளன.

# ஒபாமாவுக்கு விலையுயர்ந்த பரிசுப்பொருட்கள் சவுதி அரேபிய மன்னர் அப்துல்லா வழங்கினார்




உலகப் புகழ்பெற்ற தலைவர்களுக்கு சவுதி அரேபிய மன்னர் அப்துல்லா பரிசுப் பொருட்களை அன்பளிப்பாக வழங்குவது வழக்கம். இந்நிலையில் அவர் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு ரூ 1.5 கோடிக்கும் அதிகமான பரிசுப் பொருட்களை வழங்கியுள்ள தகவல் தற்போது வெளியாகியுள்ளது. அவற்றை தங்கம், வைரம், வைடூரியம் போன்ற விலை உயர்ந்த இரத்தினங்களால் தயாரிக்கப்பட்ட நகைகள் மற்றும் பொருட்களாக வழங்கியிருக்கிறார்.

ஒபாமா பதவி ஏற்று முதலாம் ஆண்டு நிறைவு பெற்றதைத் தொடர்ந்து, அவருக்கும் அவரது குடும்பத்தினர் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கும் இவற்றைக் கொடுத்துள்ளார். அதில் ஒபாமாவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் மட்டும் ரூபா 90 லட்சம் மதிப்புள்ள ஆடம்பர வைரங்களைக் கொடுத்துள்ளார்.

ஒபாமாவின் மனைவி மிச்சேலுக்கு ரூபா 60 லட்சம் மதிப்புள்ள ரூபி மற்றும் வைர நகைகளைப் பரிசாக அளித்துள்ளார். மேலும் தங்கத்தால் தயாரிக்கப்பட்ட பேரிச்சை மரங்கள், ஒட்டகங்கள், கடிகாரங்கள் போன்றவையும் வழங்கப்பட்டுள்ளன. ஒபாமாவின் மகள்கள் சாஷா, மலியா ஆகியோருக்கு ரூ. 3 லட்சம் மதிப்புள்ள வைரத் தோடுகள், நெக்லஸ் நகைகளும் வெள்ளை மாளிகையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு விலையுயர்ந்த கைக்கடிகாரங்கள், பிரேஷ்லெட்டுகள் மற்றும் பேனாக்களையும் மன்னர் அப்துல்லா வழங்கியுள்ளார்.

இந்தத் தகவலை சவுதி அரேபியாவிலிருந்து வெளியாகும் ஒரு பத்திரிகை தெரிவித்துள்ளது.

# சதாம் எழுதிய கதை சினிமாப் படமாகிறது



சர்வாதிகாரியான ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் 24 வருடங்களாக ஈராக்கில் ஆட்சி நடத்தினார். அமெரிக்க இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு அவர் தூக்கி லிட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் ஜனாதிபதியாக இருந்த போது கடந்த 1979 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் 4 கதைகள் எழுதிப் புத்தகங்களாக வெளியிட்டார். அவை ஈராக்கில் பெருமளவில் விற்றுச் சாதனை படைத்தன.

இந்த நிலையில் அவர் எழுதிய "ஷபீபா அண்டு தி கிங்", "புருனோ" என்ற கதைகள் சினிமாப் படமாகத் தயாரிக்கப்படுகிறது. பேரமவுண்ட் ஆங்கிலப் பட நிறுவனம் இவற்றைத் தயாரிக்க முடிவு செய்துள்ளது.

இவற்றை இயக்குநர் சாஜா பரோன் கோகென் இயக்குகிறார். இதற்கான நடிகர், நடிகைகள் தேர்வு தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

# 30 பவுண்ஸ் பணத்துக்காக அடிவாங்கிய மூதாட்டி



92 வயதுள்ள பாட்டி ஒருவரை அவரிடம் உள்ள 30 பவுண்ஸ் பணத்தைத் திருடுவதற்காக ரௌடிக் கும்பல் ஒன்று கடுமையாகத் தாக்கிய சம்பவம் மான்செஸ்டரில் நிகழ்ந்துள்ளது.

பார்வைக் குறைபாடுள்ள 92 வயதுப் பாட்டி தனது நாயை மான்செஸ்டரில் உள்ள தன் வீட்டிற்கு வெளியில் சில நிமிடங்கள் விட்டு விட்டு கையில் பையுடன் நின்றுள்ளார்.

அப்போது அங்கு வந்த திருட்டுக் கும்பலொன்று பாட்டியை கொடூரமாகத் தாக்கியுள்ளனர். கண்களில் இருந்து இரத்தம் வரும் அளவிற்கு அவரை அடித்ததுடன் , கொடூரமாக மிதிக்கவும் செய்துள்ளனர்.

நாற்பது வருடங்களுக்கும் மேல் அதே வீட்டில் வசித்து வரும் இந்தப் பாட்டி கடந்த ஒரு வருடத்தில் மட்டும் மூன்று முறை இது போன்று தாக்கப்பட்டுள்ளார்.

கடுமையாகத் தாக்கப்பட்ட பாட்டி எப்படியோ தள்ளாடித் தள்ளாடி பக்கத்து வீட்டை அடைந்து அவர்களின் உதவியுடன் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

தற்போது அந்த வீட்டில் குடியிருக்கவே பயமாக இருப்பதாக அந்தப் பாட்டி கூறுகிறார்.

அடிக்கடி இது போன்ற சம்பங்கள் நிகழ்வதால் ஏதோ ஒரு திருட்டுக் கும்பல் பாட்டியைக் கண்காணிப்பதாக மருத்துவமனையில் இவரைக் காண வந்த உறவினர்கள் சந்தேகித்துள்ளனர்.

# எடியூரப்பா மீது வழக்குத் தொடர அனுமதித்தமைக்கு ஆளுநரிடம் மத்திய அரசு விளக்கம் கோருகின்றது

(பெங்களூர்)

முதலமைச்சர் எடியூரப்பா மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின் படி வழக்குத் தொடர ஆளுநர் பரத்வாஜ் அனுமதி கொடுத்தது கர்நாடக மாநிலத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு ஆளுநர் செயற்படுவது வெளிப்படையாகத் தெரிவதால், மக்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

கர்நாடகத்தில் நடந்து வரும் அரசியல் திருப்பங்களால் தங்களுக்குக் கெட்டப்பெயர் வந்து விடக்கூடாது என மத்திய அரசு உஷாராகி உள்ளது.

இதையடுத்து மத்திய உட்துறை அமைச்சகம், ஆளுநர் பரத்வாஜிடம் விளக்கம் கேட்டுள்ளது. எந்த அடிப்படையில் எடியூரப்பா மீது வழக்குத் தொடர அனுமதி கொடுத்தீர்கள் என்றும், இதற்கு உடனடியாகப் பதில் தருமாறும் பரத்வாஜிடம் கேட்கப்பட்டது.

உட்துறையின் அந்த உத்தரவுக்கு ஆளுநர் பரத்வாஜ் நேற்றுக் காலை பதில் அனுப்பினார். எடியூரப்பா மீது வழக்குத் தொடர அனுமதி கேட்டு மனுக் கொடுத்த 2 சட்டத்தரணிகள், சுமார் 2 ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஆவணங்களை ஆதாரமாக ஆளுநரிடம் கொடுத்திருந்தனர்.

அந்த 2 ஆயிரம் பக்க ஆவணங்களை உட்துறை அமைச்சகத்துக்கு ஆளுநர் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இதற்கிடையே பரத்வாஜுக்கு எதிராகப் போராட்டத்தைத் தீவிரப்படுத்த பா.ஜ.க.வினர் முடிவு செய்துள்ளனர்.

இதுகுறித்துக் கர்நாடக மாநில பா.ஜ.க. தலைவர் ஈசுவரப்பா கூறியதாவது -

முதலமைச்சர் எடியூரப்பா மீது வழக்குத் தொடர ஆளுநர் அனுமதியளித்திருப்பது துரதிஷ்ட வசமான முடிவு. எந்த ஒரு ஆதாரமும் இல்லாத குற்றச்சாட்டின் மீது நடவடிக்கை எடுத்திருப்பது கண்டிக்கத்தக்கது.

ஆளுநர்பரத்வாஜ் கர்நாடகத்துக்கு வந்த நாள் முதல் எதிர்க்கட்சிகளுக்குச் சார்பாக நடந்து வருகிறார். லோக் அயுக்தா விசாரணை, நீதி விசாரணை நிலுவையிலுள்ள நிலையில், யாரோ 2 சட்டத்தரணிகளிடம் இருந்து ஆளுநரே மனுவைப் பெற்றுக் கொண்டு சூழ்ச்சி அரசியல் செய்துள்ளார்.

இவ்வாறு நடந்து கொண்ட ஆளுநருக்குக் கர்நாடக மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள். தான் ஆளுநர் என்பதை மறந்து அவர் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் மீது மோசமான வார்த்தையால் விமர்சனம் செய்தார். இதை மக்கள் உணர்ந்துள்ளனர். ஆளுநரின் இந்தப் பேச்சு மூலம் கர்நாடக மக்கள் வேதனை அடைந்துள்ளனர்.

இந்த நிலையில் வழக்குத் தொடர அனுமதி வழங்கி நடவடிக்கை எடுத்ததன் மூலம் மாநில மக்கள் மேலும் மன வேதனைக்குத் தள்ளப்பட்டு உள்ளனர். ஆளுநர் பரத்வாஜ் கன்னட மக்களுக்கு அவமானம் செய்துள்ளார். இதற்காக அவர் உடனடியாக கர்நாடக மக்களிடம மன்னிப்புக் கேட்கவேண்டும்.

இந்தநிலையில் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் ஒன்றை விடுக்கிறோம். ஆளுநர் பரத்வாஜை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும். நாடாளுமன்றத் தேர்தல், பெங்களூர் மாநகராட்சித் தேர்தல், சமீபத்தில் நடந்த பஞ்சாயத்து தேர்தலிலும் பா.ஜனதா அமோக வெற்றி பெற்றது. எடியூரப்பா அரசின் சாதனையைப் பாராட்டி மக்கள் வாக்களித்துள்ளனர்.

# தொழில் அதிபரான அனில் அம்பானிக்கு மின்னஞ்சல் முகவரியில் கொலை மிரட்டல்

(மும்பை)

பிரபல தொழில் அதிபர் அனில் அம்பானி (வயது 51). இவர் ரிலையன்ஸ் அனில் திருபாய் அம்பானி குரூப் நிறுவனங்களின் தலைவர் ஆவார். கடந்த 15 ஆம் திகதி பொங்கல் பண்டிகையன்று, இவரது மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு மின்னஞ்சல் வந்தது.



அந்த மின்னஞ்சலில் அனில் திருபாய் அம்பானியைக் கொல்லப்போவதாக மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது. இது குறித்து மும்பை குற்றப்பிரிவு பொலிஸில் புகார் செய்யப்பட்டது. பொலிஸார் வழக்குப் பதிவு செய்து புலன் விசாரணை நடத்தி வந்தனர்.

விசாரணையில் ஜார்க்கண்ட் மாநிலம், தன்பாத் மாவட்டத்தைச் சேர்ந்த வாலிபர் ராஜேஷ் குமார் அகர்வால்தான் இந்த மின்னஞ்சல் அனுப்பியுள்ளார் எனத் தெரிய வந்தது.

இதையடுத்து மும்பை குற்றப்பிரிவுப் பொலிஸார் அவரது சொந்த ஊருக்குச் சென்று அவரைக் கைது செய்தனர்.

# சபரிமலையில் பக்தர்கள் தங்க 2 மாடிக் கட்டடம் நிர்மாணிப்பு

(திருவனந்தபுரம்)

சபரிமலையில் சன்னிதானம் அருகே பக்தர்கள் காத்திருக்க 2 மாடிகள் கொண்ட மண்டபம் கட்டப்படும் என உயர் நீதிமன்றத்தில் கேரள அரசு தெரிவித்துள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோயிலில் கடந்த 14 ஆம் திகதி மகர ஜோதி தரிசனத்தின்போது புல்மேட்டில் ஏற்பட்ட நெரிசலில் 102 பக்தர்கள் பலியாகினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக திருவிதாங்கூர் தேவசம் சபை, வனத்துறை மற்றும் பொலிஸார் சார்பில் கேரள உயர் நீதிமன்றத்தில் தனித்தனி அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன.




இந்த அறிக்கைகளைப் பரிசீலித்த நீதிபதிகள், சபரிமலையில் பக்தர்களுக்குச் செய்ய வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து, மாநில உட்துறைச் செயலாளர் ஜெயக்குமார் சமீபத்தில் நடத்திய ஆலோசனைகளை அறிக்கையாகத் தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டார்.

அதன்படி, உட்துறைச் செயலாளரின் அறிக்கை கேரள உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது. அதில் கூறியிருப்பதாவது -

எதிர்காலத்தில் சபரி மலைக்கு வரும் பக்தர்களின் பாதுகாப்புக்குத் தேவையான நிரந்தரமான வசதிகள் மேற்கொள்ளப்படும். நிலக்கல் பகுதியில் பக்தாகளுக்காக முகாம் அமைத்து நெரிசல் கட்டுப்படுத்தப்படும்.

சன்னிதானம் அருகே பக்தர்கள் வரிசையில் காத்திருக்க 2 மாடிகள் கொண்ட மண்டபம் கட்டப்படும்.

மேலும் ஸ்ரீகோயில் அருகே ஒரு மேம்பாலம் அமைக்கப்படும். பக்தர்களுக்குத் தேவையான பாதுகாப்பு ஏற்படுத்துவது குறித்து உயர் நிலைக் குழுவின் ஆலோசனைகள் அமுல்படுத்தப்படும்.

புல்மேட்டில் 102 பேர் பலியான சம்பவம் தொடர்பாக குற்றப்பிரிவுப் பொலிஸார் விசாரணையை நடத்தி வருகிறார்கள்.

இதில் விபத்துக்கான உண்மைக் காரணம் தெரியவரும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடியரசுதின விழாவையொட்டி தலைநகரில் பலத்த பாதுகாப்பு

(டெல்லி)

குடியரசு தின விழாக் கொண்டாட்டத்தையொட்டி, டெல்லியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஊர்வலப் பாதையில் 100 ரகசிய கமராக்கள் பொருத்தப்படுகின்றன.


எதிர்வரும் 26 ஆம் திகதி நாடு முழுவதும் குடியரசு தின விழா கோலாகலமாகக் கொண்டாடப்படவுள்ளது. நாட்டின் தலைநகர் டெல்லியில் நடைபெறும் விழா என்பதால் இது மிகவும் பிரசித்திபெற்றது.

ராஜபாதையில் இருந்து செங்கோட்டை வரை நடைபெறும் அணிவகுப்பும், அலங்கார ஊர்திகளின் ஊர்வலம், கலை நிகழ்வுகளும் கண்ணொள்ளாக் காட்சியாகும்.

அத்துடன், விரதீரச் செயல் புரிந்தவர்களுக்கு பதக்கம் மற்றும் விருது வழங்கும் நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

இந்த ஆண்டுக் கொண்டாட்டத்தில் இந்தோனேசியா ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோ சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

# எடியூரப்பா பதவி விலக மாட்டார் பா.ஜ.க செய்தியாளர் தெரிவிப்பு



(பெங்களூர்)

கர்நாடக முதல்வர் பதவியிலிருந்து எடியூரப்பா எக்காரணம் கொண்டும் பதவி விலக மாட்டார் என, அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் தர்மேந்திர பிரசாத் தெரிவித்துள்ளார்.

கர்நாடக முதல்வர் எடியூரப்பா, அமைச்சர் அசோக் ஆகியோர் மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின் படி வழக்குத் தொடர ஆளுநர் அனுமதி கொடுத்திருக்கிறார்.

இதற்குக் கண்டனம் தெரிவித்து, கர்நாடக மாநிலம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடததப்படும் என்று, கர்நாடக மாநில பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் ஈஸ்வரப்பா தெரிவித்தார்.

இந்நிலையில் பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் தர்மேந்திர பிரசாத், எடியூரப்பா மீதான ஊழல் புகார்களை விசாரிக்க ஆளுநர் பரத்வாஜ் அனுமதி அளித்தது கண்டிக்கத்தக்கது.

ஆளுநர் மாளிகை, காங்கிரஸ் அலுவலகம் மாதிரி செயற்படுவதாகவும், முதல்வரை, ஆளுநரை எதிரியாகப் பாவிப்பதாகவும் அவர் கூறினார்.

இதற்கிடையில் மாநிலத்தில், பா.ஜ.க.வினர் அழைப்பு விடுத்துள்ள மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டத்தால் ஆங்காங்கே பரபரப்பு நிலவுகிறது.

கல்வி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக கர்நாடக எல்லையான ஒசூரில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஞாயிறு நற்சிந்தனை



**இயேசு, "மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது; எனப் பறைசாற்றத் தொடங்கினார்"**

(மத்தேயு 4:17)

மக்களாகிய நம் வாழ்க்கை முறையை மாற்ற வேண்டும், கடவுளின் பார்வை யைப் பெற வேண்டும், கடவுளின் திரு வுளம் யாதென அறிந்துணர்ந்து, அதை எம் வாழ்வில் செயற்படுத்த வேண்டும் - இதுவே இயேசு கடவுளாட்சி பற்றி அறிவித்த நற்செய்தியின் சாரம். மனம் மாற வேண்டும் என்றால் மனித சிந்தனை, நன்னெறிக்கு ஏற்ப அமைய வேண்டும். சிந்தனை நலமாக மாறும்போது அதிலிருந்து பிறக்கின்ற செயல் நலமாக இருக்கும். செயல் நலமாகும் போது அது பிறருக்கு நலம் பயக்கும். மனம் உள்ளிருந்து செயலாற்றும் சக்தி. எனவே மனம் மாறும்போது நம்மில் உள்ளார்ந்த மாற்றம் ஏற்படும். உள்ளத்தில் புத்துணர்ச்சி ஏற்பட வேண்டும், உள்ளம் கடவுளிடம் திரும்பவேண்டும், தீமையை எண்ணுகின்ற போக்கு மறைந்து, நன்மையை நாடுகின்ற உள்ளம் எம்மில் வளர வேண்டும். இவ்வாறு நாம் மனம் மாறினால் கடவுளின் ஆட்சியில் பங்கேற்க கடவுள் நமக்கு அருள் வளங்கி, ஆசீர் அளிப்பார்.

இயேசுவைப் பின்தொடரும் நாம் இவற்றைப் பின்பற்றுவோம். வாழ்கையை வளமாகுவோம்.

மறையாசிரியர்
யா.அலெக்ஸ்சாண்டோ

# பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்காக 67 ஆயிரத்து 602 விண்ணப்பங்கள் விநியோகம்

## அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க



(கொழும்பு)

பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கென இவ்வருடம் 67ஆயிரத்து 602 விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டிருப்பதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களையும் ஏற்றுக்கொண்டு விண்ணப்பப்படிவங்களை விநியோகிக்கு மாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வருடம் 62ஆயிரத்து 390 விண்ணப்பப்படிவங்களும் 2009ஆம் ஆண்டில் 57 ஆயிரத்து 794 விண்ணப்பப்படிவங்களும்தான் விநியோகிக்கப்பட்டன. இதன்படி இவ்வருடமே அதிக விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

விண்ணப்பம் பெறுவதற்கான காலம் முடிவுற்றுள்ள பின்னர் தபாலில்கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும். இதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகப் பிரவேசத்திற்காக எவரும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க வேண்டிய காலம் முடிவுற்ற பின்னர் விண்ணப்பிப்பவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யும்போது அவர்களுக்கும் இவ்விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படும்.

இன்றைவரையும் விநியோகிக்கப்படும் விண்ணப்ப படிவங்களில் ஐம்பதினாயிரம் வரை பல்கலைக்கழகப் பிரவேசத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன என அமைச்சர் மேலும் கூறினார்.

# புலிச் சந்தேக நபர் ஓமந்தையில் கைது

(வவுனியா)

2 கண்களையும் இழந்த 25 வயதுடைய திருக்கோவிலைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் புலிச் சந்தேக நபர் என பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்தபோது ஓமந்தைப் பகுதியில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரைப் பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். நீதிவான் குறித்த நபரை முன்னாள் விடுதலைப்புலிப் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (39)

# சர்வதேச மட்டத்திலான வசதிகள் பூங்காக்களில் ஏற்படுத்தப்படும்

(கொழும்பு)

இலங்கையின் அனைத்து வனவியல் பூங்காக்களிலும் சர்வதேச மட்டத்திலான வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று வனவியல் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் சந்திரவம்ச பத்திராச தெரிவித்தார்.

வனவியல் பாதுகாப்பு, அதன் அபிவிருத்தி என்பவற்றுக்காக இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 50 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மொனராகலை மாவட்டத்தில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சிக்கு அமைவாக ஜால சரணாலயத்தின் 2ஆம் 3 ஆம் பிரிவுகளையும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜால சரணாலயத்திற்கான புதிய நுழைவாயில் ஒன்றும் அமைக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# போலியோ உட்பட்ட பலநோய்கள் இலங்கையிலிருந்து ஒழிக்கப்பட்டன

(கொழும்பு)

போலியோ உட்பட பல நோய்கள் இலங்கையிலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தெற்காசியாவின் சுகாதாரத் துறையில் இலங்கை முதலிடத்தில் உள்ளது. தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தக் கூடிய வாய்ப்புக் காணப்படுகிறது.

இன்புளுவன்சா ஏ எச் 1 என் 1 தொற்று நோய்க்கான தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை வெற்றிகரமான முறையில் இடம்பெறுகின்றது. 2 வாரங்களுக்குள் 2 மில்லியன் பேருக்கு இந்தத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்சமயம் 30 நோய்களுக்கான தடுப்பூசிகள் ஏற்றப்படுவதாகவும் அமைச்சின் தொற்றுநோய்ப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ள அனர்த்தம் காரணமாக 4 இலட்சம் சிறுவர்கள் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் சுமார் நான்கு இலட்சம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, சிறுவர் பாதுகாப்பு நிதியம் (Save the Children) என்ற சர்வதேச தொண்டு நிறுவனம் தெரிவித்தது.

இது தொடர்பாக, அந்த நிறுவனத்தின் அவசர பிரிவுப் பணிப்பாளர் கெலத் ஒவென் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகிறது. வெள்ள அனர்த்தம் காரணமாக மூன்று இலட்சத்து 50 ஆயிரம் பேர் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய வீடுகள், விவசாய நிலங்கள் என்பன முழுமையாகச் சேதமடைந்துள்ளன.

கடந்த சுனாமி அனர்த்தம், மற்றும் தற்போதைய வெள்ள அனர்த்தம் ஆகியவற்றால் இலங்கையின் கிழக்குப்பகுதிச் சிறுவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உதவ அனைவரும் முன்வர வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்தார்.

# அடையாளம் காணப்பட்ட சந்தேகநபர் விளக்கமறியலில்

(வவுனியா)

வவுனியாவில் இடம்பெற்ற கொலை, கொள்ளையுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இது குறித்துத் தெரிய வருவதாவது,

கடந்த 2009 ஆம் ஆண்டு தீபாவளிக்கு முதல் வவுனியா மதுராங்குளத்தில் இரவு வேளையில் 2 இளைஞர்களைச் சுட்டுக் கொன்று 2 வீடுகளில் ஆயுத முனையில் நகைகளைக் கொள்ளையடித்தார் என்ற குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சந்தேக நபரே நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியா நீதிமன்றில் இடம்பெற்ற அடையாள அணி வகுப்பின் போது அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா நீதிவான் மற்றும் பதில் நீதிவான் எம்.சிற்றம்பலம் முன்னிலையில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பின் போது 4 சாட்சிகளினால் குறித்த சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நபரை பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் மீது கொலை, கொள்ளை சம்பந்தமாக வவுனியா நீதிமன்றில் 9 வழக்குகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (39)

# சுங்கத்திணைக்கள அலுவலகம் பிரதம தபாலகத்தில் திறந்துவைப்பு



(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுங்கத்திணைக்கள அலுவலகம் நேற்றுக்காலை யாழ்.பிரதான தபாலகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

சுங்கத்திணைக்களப் பணிப்பாளர் திருமதி சுதர்மா கருணாரட்ண, அஞ்சல் மா அதிபர் எம்.கே.பி.திசாநாயக்கா ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டி சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தனர்.

மட்டுப்படுத்தப்பட்ட ஆளணி, அலுவலக வசதியுடன் ஆரம்பிக்கப்பட்ட இச் சுங்கத்திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்ந்து வரும் காலங்களில் இதர பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

யாழ்.தபாலகத்திற்கு வருகின்ற பார்சல்களைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகளும் நேற்று சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடபிராந்திய அஞ்சல் மா அதிபர், யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சுங்கத்திணைக்கள அதிகாரிகள், தபாலக அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (பா)(57)

# அறிவோர் ஒன்று கூடலில் சிறுகதைத் தொகுப்பு வெளியீடு

(கும்பளை)

அறிவோர் ஒன்றுகூடல் இலக்கியச்சோலை இ.து குலசிங்கம் தலைமையில் அண்மையில் புலோலியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஜேர்மனியிலிருந்து வருகை தந்த புலம்பெயர் எழுத்தாளர் பொ.கருணாகரமூர்த்தி அவர்களின் "பதுங்குகுழி" எனும் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடும் இடம்பெற்றது.

மேற்படி நூலினை சிரேஷ்ட எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகன் வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து இடம்பெற்ற கருத்துப் பகிர்வில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. தி. வேல் நம்பி, அ.குணேஸ்வரன், குப்பிளான் ஐ.சண்முகன், கமலசுதர்சன் பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர். (62)

# திருடர்களைப் பார்க்க குருநகரில் திரண்டமக்கள்

(கொக்குவில்)

மூன்று திருடர்களைப் பொலிஸார் நேற்று முன்தினம் நண்பகல் 11 மணியளவில் குருநகரில் அமைந்துள்ள நகைக்கடைக்கு அழைத்து வந்திருந்தனர்.

பொலிஸ் வாகனத்தில் திருடர்கள் அழைத்துவரப்பட்ட செய்தியை அறிந்த பெருந்திரளான அப்பகுதி வாசிகள் திருடர்களைப் பார்ப்பதற்குக் கூடியதால் போக்குவரவு சிறிது நேரம் ஸ்தம்பிதம் அடைய நேர்ந்தது.

பொலிஸாரிடம் பிடிபட்ட திருடர்கள் மேற்படி நகைக் கடையில் நகையை விற்பனை செய்துள்ளதை அடுத்தே அவர்கள் அழைத்து வரப்பட்டதாகத் தெரிய வந்தது. திருடர் நகையை விற்றதற்கான பற்றுச்சீட்டு ஒப்பிட்டுப்பார்க்கப் பட்டதைத் தொடர்ந்து குறிப்பிட்ட நகையை மீளளிக்க பொலிஸார் கேட்டுக் கொண்டதுடன் திருடர்களைத் திரும்பவும் கூட்டிச் சென்றனர். (68)

# ஐ.தே.கட்சி பிரதிநிதிகள் வவுனியாவுக்கு விஜயம்

(வவுனியா)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பாக ஐ.தே.கட்சி பிரதிநிதிகளான டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன, எஸ்.சுவாமிநாதன் ஆகியோர் நாளை திங்கட்கிழமை வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான முக்கிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடவுள்ளதாகத் தெரியவருகிறது. (39)

# பொன்சேகாவின் நாடாளுமன்ற ஆசனம் புதியவரை நியமிக்க ஏற்பாடு!



(கொழும்பு)

ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவின் வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் லக்ஷ்மன் நிபுணாரச்சி சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்ததையடுத்து, நாடாளுமன்ற ஆசன வெற்றிடத்தை நிரப்ப ஒருவரை நியமிக்கும்படி நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக கித்துல்கொட தேர்தல் ஆணையாளரை எழுத்து மூலம் கோரியுள்ளார்.

ஏற்கனவே விருப்பு வாக்குகளின் அடிப்படையில் பொன்சேகாவுக்கு அடுத்ததாகவிருந்த லக்ஷ்மன் நிபுணாராச்சியின் பெயரை தேர்தல் ஆணையாளர் முன்மொழிந்தார்.

சட்டத்தின் பிரகாரம் தேர்தல் ஆணையாளரால் முன்மொழியப்பட்டவர் சபாநாயகர் முன்னிலையில் மூன்று மாதத்திற்குள் சத்திய பிரமாணம் செய்ய வேண்டும்.

எவ்வாறாயினும், கடந்த ஜனவரி 14ஆம் திகதியுடன் மூன்று மாதம் கடந்துவிட்ட நிலையில், நாடாளுமன்ற ஆசனத்திற்கு வெற்றிடம் உள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க கித்துல்கொட தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார். விருப்பு வாக்குகளின் அடிப் படையில் நிபுணாராச்சிக்கு அடுத்ததாக ஜயந்த கேட்டகொட உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆதரவற்ற சிறுவர்கள் பாதுகாப்புக்கு ஏற்பாடு!

(கொழும்பு)

பெற்றோர்களின் அரவணைப்பற்ற பிள்ளைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை நன்னடத்தை திணைக்களம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை என்பன மேற்கொண்டுள்ளன.

இதற்கான தீர்மானம் நேற்றையதினம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை மூலம் பிள்ளைகளின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்ற நடவடிக்கைகள் முன் எடுக்கப்படும் என வட.மத்திய மாகாண நன்னடத்தை ஆணையாளர் தம்மிக நாமல் முத்துகல தெரிவித்துள்ளார்.

எனினும், பிள்ளைகளுக்கான ஆலோசனைகளை வழங்குவதற்கான வசதிகள் குறைந்தளவில் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்காகச் சிறுவர் அதிகார சபையின் உதவியினை நாடவுள்ளதாகவும் வட.மத்திய மாகாண நன்னடத்தை ஆணையாளர் தம்மிக நாமல் முத்துகல தெரிவித்துள்ளார்.

## யாழ்.வன்முறைச் சம்பவங்கள்...

படுத்துவதற்காக 24 மணித் தியாலமும் படையினர் மோட்டார் சைக்கிள் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக இங்கு உரையாற்றிய மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

தேர்தல் காலங்களில் வன்முறைகள் அதிகரித்தால் நகரப் பகுதிகளில் காவலரண்களில் சந்தேகத்திற்கிடமானவர்கள் மீது உடற்சோதனைகளும் மேற்கொள்ளப்படலாம் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக குறுகிய காலத்திற்கு இத்தகைய நடவடிக்கைகளுக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கோரினார்.

இதனால், பொதுமக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படலாம் என்றபோதிலும், மக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு இத்தகைய நடவடிக்கைகளை தாம் ஏற்றுக்கொள்வதாக யாழ். ஆயரும் அரசாங்க அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

மேலும், யாழ்ப்பாணத்தில் பாதாள உலகக் குழுக்கள் எவையும் கிடையாது என யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் வன்முறைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் எனக்கு பணிப்புரை விடுத்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் பாதாள உலகக் குழுக்கள் எவையும் கிடையாது. ஆடம்பர வாழ்க்கை வாழ விரும்பும் சில நபர்களே கொள்ளைகள், களவுகளில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

## ஐ.நா.நிபுணர் குழுவுடன்...

இலங்கை அரசாங்கம் பான் கீ மூனின் ஆலோசகர்களுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தும் எனவும், நிபுணர் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தாது எனவும், வடக்கில் புலிகளுடனான போரின் போது இலங்கை படை த்தரப்பிற்குத் தலைமை தாங்கியவரும், ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய பிரதி வதிவிடப் பிரதிநிதியுமான மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா ஐக்கிய நாடுகள் சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந் நிபுணர் குழு இலங்கைக்கு விஜயம் செய்வதில் தடையில்லை என ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித்த ஹொகன்ன அண்மையில் அறிவித்திருந்தார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில், நிபுணர் குழு சாட்சியம் அளிப்பதற்கு எந்தவித தடையும் கிடையாது என இலங்கை அரசாங்கமும் அறிவித்திருந்தது.

ஆயினும், உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவை விடவும் பரந்தளவில் விசாரணைகளை மேற்கொள்ள நிபுணர் குழு இலங்கை அரசாங்கத்திடம் அனுமதி கோரியிருந்த போது, இதற்கான அனுமதி இலங்கை அரசாங்கத்தால் மறுக்கப்பட்டிருந்தது.


இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் இந் நிபுணர் குழு அறிக்கை சமர்ப்பிப்பதற்கான காலம் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன் முடிவுடையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் மேலும்...

கிடைக்கும் மிகப்பெரிய விருந்தாக அமைய முடியும். இக்கூற்றுக்கு இணங்க அனைத்து அரச அதிகாரிகளும் விசுவாசத்தோடு அர்ப்பணிப்புச் சேவையினை ஆற்ற முன்வர வேண்டும்.

மேலும், தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளில் ஒரு இலட்சம் பேரை இந்த ஆண்டு இறுதிக்குள் வடபகுதியில் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளை அகதிகளுக்கான உயர்ஸ் தானிகராயலம் எடுத்து வருவ தாகவும், இது தொடர்பாகத் தம்முடன் தொடர்பு கொண்டதா கவும் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சகோதரத்துவ சுற்றுலா; யுத்தக் கப்பல் கொழும்பில்!



(கொழும்பு)

எச்.எம்.ஏ.எஸ் மெல்பேன் எனப்படும் அவுஸ்ரேலிய கடற்படைக்குச் சொந்தமான யுத்தக கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்த யுத்தக் கப்பல் நேற்று முற்பகல் வருகை தந்ததாக கடற்படை பேச்சாளர் அதுல செனரத் தெரிவித்துள்ளார்.

சகோதாரத்துவ சுற்றுலாவாகவே இந்த விஜயம் அமைவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்த அவுஸ்ரேலியக் கப்பல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை இலங்கையில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டின் வெள்ளப் பாதிப்பு; நோர்வேயின் உதவி இலங்கைக்கு

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிதியுதவி வழங்க நோர்வே அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதற்கமைய, 60 இலட்சம் நோர்வே குரோனை வழங்க நோர்வே அரசாங்கம் முன்வந்துள்ளதாக நோர்வேயின் சுற்றாடல் மற்றும் உள்துறை அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த நிலையிலுள்ள மக்களுக்கான சுத்தமான குடிநீர், உணவு மற்றும் இருப்பிட வசதிகள் இந்த நிதி மூலம் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இந்த நிதி ஐ.நா.சபையின் சிறுவர் நிதியம் மற்றும் நோர்வே அகதிகளுக்கான சபையினூடாக வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த இரு அமைப்புக்களும் ஏற்கனவே வெள்ளத்தினால் பாதிப்படைந்த பிரதேசங்களில் தமது நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# சிறைக்கூடத்தினுள் ஹெரோயின் போதைவஸ்து

### ஒருவர் கைது செய்யப்பட்டார்

நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் ஹெரோயின் போதைப் பொருளை எடுத்து சென்ற ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதி ஒருவரை பார்வையிடச் சென்றபோதே அவர் இந்த ஹெரோயின் போதைப் பொருளை எடுத்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் கொச்சிக்கடை போரதொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரை நேற் றைய தினம் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கிளிநொச்சி நகரில் குடியமரும் முஸ்லிம்கள்

யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர திரும்பியுள்ள குடும்பங்களில் சிலவற்றை கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாக யாழ். மாநகர சபை உறுப்பினர் மௌலவி பி.ஏ.எஸ்.சுஃபியான் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் மீளக்குடியமர்வதற்கு இடம் பெயர்ந்து பிற மாவட்டங்களில் வசிக்கும் முஸ்லிம் குடும்பங்கள் ஆர்வமாயுள்ளன.

ஆயினும் இவர்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பில் காணிகள் பற்றாக்குறை பிரச்சினையாக உள்ளது. இதனால் மீளக் குடியமரவென யாழ். குடா நாட்டுக்கு வருகை தந்த ஏராளமான முஸ்லிம் குடும்பங்கள் தமக்கான மீள்குடியேற்றம் சம்பந்தப்பட்ட பதிவுகளை மேற்கொண்டபோதிலும், குடியமர காணிகள் இல்லாத காரணத்தால் அவர்கள் மீண்டும் தாம் இடம் பெயர்ந்து வசித்துவரும் இட்ங்களுக்கே திரும்பிச் சென்றுள்ளனர். இதனையடுத்து காணியற்ற யாழ். முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்துக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருடனும் ஆலோசிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட மௌலவி சுஃபியான். கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் முழுமைப்பெற்ற பின்னர் இது பற்றி கவனம் செலுத்துவதாக கிளிநொச்சி அரச அதிபர் தனக்கு கூறியிருப்பதாகவும் கூறினார்.

# அமெரிக்க தகவல் நிலையம் யாழில் நாளை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணத்தில் நாளை திங்கட்கிழமை மாலை அமெரிக்க தகவல் நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்த நிலையத்தை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் பற்றீஸியா புட்டினிஸ் அம்மையார் திறந்து வைக்கவுள்ளார்.

இந்நிலையம் யாழ்ப்பாணம் நாலாம் குறுக்குத் தெரு 159ஆம் இலக்க சமூக செயற்பாட்டு நிலையத்தில் செயற்படவுள்ளது.

இந்நிலையத்தில் அமெரிக்க நாட்டு புவியியல் வரலாறு, நாடு அடைந்துள்ள முன்னேற்றம், உலக நாடுகளுக்கான அமெரிக்க உதவி, கலாசார பண்பாட்டு பழக்கவழக்கங்கள் போன்ற முக்கிய தகவல்கள் காட்சிப்படுத்தப்படுவதுடன், சஞ்சிகைகள், நூல்கள் ஆகியவற்றையும் அறிந்துகொள்ள முடியும். இங்கு இன்டர்நெட் வசதியும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

அமெரிக்க தூதுவர் இரண்டு நாட்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து, அமெரிக்க அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவார்.

# போர்க்குற்றங்களுக்கு பதில் கூறவேண்டும் தேசிய நல்லிணக்கத்துக்கு அது அவசியம்

## அமெரிக்கா மீண்டும் வலியுறுத்துகிறது



(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமெரிக்காவுக்கு தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டுள்ள நிலையில், போர்க் குற்றங்களுக்கு பதில் கூறும் கடமை இலங்கையின் தேசிய நல்லிணக்கத்திற்கு அவசியம் என அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், அமெரிக்காவுக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அதிகாரிகள் எவரும் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் குரல்தரவல்ல அதிகாரி பி.ஜே.குரோலி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டமைக்காக இலங்கை ஜனாதிபதி மகிந்த மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் குறித்து இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் குரல்தரவல்ல அதிகாரி குரோலி, இவ் விவகாரம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற செயன்முறைகளை அமெரிக்கா ஆதரிப்பதாக பதிலளித்துள்ளதுடன், இச்செயல்முறை இன்னும் இடம்பெற்று வருவதாகவும் கூறியுள்ளார்.

"சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறியவர்கள் இவற்றுக்குப் பொறுப்பாளிகள் ஆக்கப்பட வேண்டும் என நாம் திடமாக நம்புகின்றோம்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவது இலங்கையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு மிகவும் அவசியமானது என நாம் நம்புகின்றோம்" என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவுக்கான எதிர்ப்பை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் கைவிட வேண்டும் என அமெரிக்கா கருதினால் ஏன் நீங்கள் அவரைச் சந்திக்கும்படி கோரிக்கை விடுக்கவில்லை என இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கேள்வி எழுப்பப்பட்டது.

"போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற செயல்முறைகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை நாம் பொறுத்திருந்து பார்ப்போம். இதில் குறைபாடுகள் ஏதும் இருப்பின் அது குறித்து இலங்கை அரசாங்கத்துக்கு கூறுவதற்கு அமெரிக்கா தயங்காது" என அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் குரல்தரவல்ல அதிகாரி குரோலி பதிலளித்துள்ளார்.

# எமது நாட்டின் அபிவிருத்திக்காக எந்த சவாலுக்கும் முகம்கொடுப்போம்

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ



(கொழும்பு)

அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் முன் வெற்றிகரமான அரசாங்கமாக மேம்பட்டு வரும் இலங்கை அரசாங்கத்திற்கு பல்வேறு சர்வதேச அழுத்தங்கள் பிரயோகிக்கப்படலாம் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பொதுமக்கள் இது தொடர்பில் அவதானமாக செயற்படவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

பொருளாதார ரீதியாக இலங்கை தலைநிமிர்ந்து இருப்பதை பொறுத்துக்கொள்ள முடியாத வெளிநாடுகள் பல, தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தி நாட்டை பின்தள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் அபிவிருத்தி தொடர்பான எந்தவொரு சவாலுக்கும் வெற்றிகரமாக முகம்கொடுக்க ஜனாதிபதியும், அரசாங்கமும் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# புதிய விளையாட்டு யாழில் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இராணுவ படைத் தலைமையினால் பாடசாலை மாணவர்களுக்கு 'ரேக்வோண்டா' எனும் புதிய விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டு பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கே இப்புதிய விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டு அதற்கான பயிற்சிகள் துரையப்பா விளையாட்டரங்கில் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலைகள் தோறும் இப்பயிற்சியில் இணைத்துகொள்வதற்காக ஏற்கனவே கடந்த ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தலா 20 மாணவர் வீதம் இப்பயிற்சிக்களத்திற்கு தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு விசேட நிபுணர் குழுவினரால் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை இப்பயிற்சிக்கு மாணவர்களை அழைத்துச்செல்வதற்கான போக்குவரத்து வசதிகளையும் இராணுவத்தினரே ஏற்பாடு செய்திருந்தனர். (03)

# வீதி விபத்தில் எருமைகள் பலி

(கொழும்பு)

ஹபரணையில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் 9 எருமை மாடுகள் கொல்லப்பட்டுள்ளன. எருமைக் கூட்டமொன்றின் மீது லொறியொன்று மோதியதால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

வீதிக்கு மத்தியில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த எருமை மாடுகளின் மீது லொறி மோதியதாக தெரிவிக்கப்படுகிறது. லொறியின் சாரதியும் இச்சம்வத்தில் காயமடைந்துள்ளார்.

## மனிதப் பாதுகாப்பு குறித்து

# ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஐ.நா. செயலர் பான் கீ மூன் உரை



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் இவ்வாண்டின் Cyril Foster ஞாபகார்த்த உரையை ஆற்றவுள்ளார்.

பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி மாலை ஆறு மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்நிழ்வில் 'மனிதப் பாதுகாப்பும், 21 ஆம் நூற்றாண்டின் ஐக்கிய நாடுகள் சபையும்' எனும் தலைப்பில் பான் கீ மூன் உரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் பார்வையாளர்கள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவு செய்ய வேண்டிய தேவை இல்லாத போதிலும், அதிகளவு பார்வையாளர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் உரிய நேரத்திற்கு சமூகமளித்து தமது ஆசனங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

அத்துடன், இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் பார்வையாளர்கள் தமது புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையையும் தம்முடன் வைத்திருக்க வேண்டும் என இந்நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதற்கு முன்னதாக, Cyril Foster ஞாபகார்த்த உரையை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகமாக பணியாற்றிய கொபி அனான் உட்பட ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகமாக மூவர் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுநீரக நோய்கள்; மூவாயிரம் பேர் மரணம்

(கொழும்பு)

நாட்டில் சிறுநீரக நோய் காரணமாக மரணமானவர்களின் எண்ணிக்கை மூவாயிரமாக அதிகரித்துள்ளதாக பண்டார நாயக்க ஆயுர்வேத ஆராய்ச்சி மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய மத்திய நிலையத்தின் பணிப்பாளர் எச்.எல்.ஒபேசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதவிர சிறுநீரக நோய் காரணமாக 2 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் வட மத்திய மாகாண மக்களிடையே அதிகளவில் காணப்படும் இந்த நோயானது தற்சமயம் வட மேல் மாகாண மக்களுக்கும் பீடிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலக்கிய விழாவைப் புறக்கணிக்கும் நோபல் பரிசு வென்ற எழுத்தாளர்கள்

(கொழும்பு)



இலங்கையில் இடம்பெறவுள்ள பிரதான இலக்கிய விழாவில் பங்கேற்கப் போவதில்லையென்று துருக்கியைச் சேர்ந்த நோபல் பரிசு வென்ற எழுத்தாளர் ஓர்ஹான்பாமுக் மற்றும், புக்கர் பரிசு வென்ற எழுத்தாளரான கிரான்தேசாய் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

பிரபல இலக்கிய வாதிகள் சிலர் விடுத்துள்ள வேண்டுகோளை ஏற்று இவர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தென் பகுதி நகரான காலியில் ஜனவரி 26 இல் சர்வதேச இலக்கிய விழா ஆரம்பமாகவுள்ளது. இந்த எழுத்தாளர்கள் சார்பாக அவர்களின் வெளியீட்டாளர்கள் இந்தியாவில் இந்த அறிவிப்பை விடுத்துள்ளனர்.

## மரண அறிவித்தல்

**அங்கப்பா முருகானந்தம்**
**(நாதஸ்வர வித்துவான்)**

அங்கப்பா முருகானந்தம் நேற்று இரவு காலமாகி விட்டார். இவர் கோண்டாவில் மேற்கு சைவப்பாடசாலை ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**சைவப்பாடசாலை ஒழுங்கை,**
**கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**

**தகவல்**
**குடும்பத்தினர்**

யாழ்.மாவட்ட மக்களுக்கு
SEC
ஷாலோம்
SHALOM
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.
குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
SHALOM வழங்கும் நற்செய்தி...!
வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்
SHALOM
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/411)
தொலைபேசி : 0217901798 - 0771044861
தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.